



# சங்கநாதம்

# SANGANATHAM



சனாதன தர்ம யுவ விழிப்புணர்சிக் கழகம் – கொழும்

Youth League For Sanathana Dharmic Perception

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கநாதம்

## முழக்கம் 12

## ஆனிமாதம் 2001 விலை 15/=

## 15.06.2001 - 15.07.2001

ஓராண்டை நிறைவுசெய்யும் சங்கநாதம்
மீண்டும் வாசக நெஞ்சங்களுக்கு வந்தனங்கள்
-கோடி

இந்துசாம்ராச்சியத்தின் மன்னன்
இந்துமக்களின் கிருஷ்ணஅவதாரம்
இப்படிப்பட்ட நேபாள மன்னனிற்காக
சிலநிமிடங்கள் மௌனஅர்ப்பணங்கள்

நாடெங்கும் பரவிக்கொண்டிருக்கும் மதமாற்றத்தை
நாளையேஒழித்து இந்துதர்மத்தின்
நன்மைக்காக சில நிமிடங்கள் செயற்படுங்கள்
நிலையான சனாதனதர்மத்தை வளருங்கள்

இவற்றை சிந்தையில் நிறுத்தி
வாசித்தறிந்தவற்றை மனதில் பூட்டி வைக்காமல்
எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்
மீண்டும் மறுஇதழில்..........

ஆசிரியர் குழு
இல.03 றிஞ்வே பிளேஸ்
கொழும்பு -04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே

- ஞானகோஷம்.
- காமசூத்திரா.
- இராமநாதக்குருக்களுடன் நேர்முகம்
- இரு மனம் இணையும் திருமணம்.
- சிலைகளைச் சிதைக்கலாம் சமயத்தையல்ல.
- மறுபிறப்பின் மறைவில்...

## ஆலோசனைக்குழு

வண.பூர்ணானந்தகிரி சுவாமிகள் (மடாதிபதி கதிர்காமம்)

திருமதி. செல்வம் கல்யாணசுந்தரம்

தமிழவேள் இ.க.கந்தசுவாமி

திரு. இ.ஜெயராஜ் (அ.இ.க.கழகம்)

திரு.க.விநாயகசோதி (நம்..பொறுப்பாளர் சிவானந்ததபோவனம்)

செல்வி. கு.குமாரலஷ்மி (காப்பாளர் சனாதனதர்மயுவழிப்புணர்ச்சிக்கழகம்)


## சங்கநாதத்தின் ஸ்வரங்கள் இந்து அமைப்புக்கள்

- மத்திய மாகாண இந்துக்கலாச்சார அமைச்சு
- மாத்தளை சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகம்
  **No,38 Vihara Road Matala T.P: 066-33014**
- திவ்யஜீவனசங்க சிவானந்த தபோவனம்
  உப்புவெளி திருக்கோணமலை.T.P: 026-21469
- நுவரெலியா இந்துக் கலாச்சாரப்பேரவை
  **No.30 Kandy Road Nuwaraeliya.T.P: 052-23099**
- அம்பாறை மாவட்ட அறநெறிப் பாடசாலைகள்
  இணையம்நற்பிட்டிமுனை கல்முனை T.P: 067-21896
- மயூரபதி இந்துசமய அறநெறிப்பாடசாலை
- திருக்கோணமலை மாவட்ட இந்து விழிப்புணர்ச்சி மன்றம்.
- திருநாவுக்கரசு குருகுல ஆதீனம் தம்பிலுவில் அம்பாறை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவலைகள்

உலகின் ஒரேயொரு இந்து நாடான நேபாள நாட்டின் மாட்சிமை தங்கிய மன்னர் பிரேந்தரா மற்றும் அரசி ஐஸ்வர்யா மற்றும் அரச குடும்பத்தினர் கடந்த 01.06.01 சுட்டுக்கொல்லப்பட்டனர்.

படுகொலை செய்யப்பட்ட நேபாள நாட்டு மன்னர் பிரேந்திரா "ஷா" என்ற அரச குடும்பத்தைச் சேர்ந்தவர். இந்த ஷா ராஜவம்சம் 1768 தோற்றுவிக்கப்பட்டது. இந்த வம்சத்தின் முதல் மன்னராக பிரிதிவி நாராயண் ஷா தான் நேபாளத்தை முதல் முதலாக ஒரு குடையின் கீழ் ஆட்சி புரிந்தார். இவரைப் பற்றி நேபாளத்தில் ஒரு புராணக்கதை உண்டு. மன்னர் பிரிதிவி நாராயண் மன்னர் பிரிதிவி நாராயண காத்மண்டு பள்ளத்தாக்கில் ஒரு முறை நுளைய முயன்ற போது கோறக்நாத் என்ற தெய்வம் துறவி விடிவில் மன்னரை வழிமறித்ததாம் அந்தத் துறவிக்கு மன்னர் பிரிதிவி தன்னிடம் இருந்த தயிரை உண்ணக்கொடுத்தார். அதை வாயில் போட்டு விழுங்கிய துறவி அதை மீண்டும் வெளியில் கக்கி மன்னரிடம் தந்து அதை உண்ணச்சென்னார். அதிர்ச்சி அடைந்த மன்னர் ஆத்திரத்தில் அதைக் கீழே வீசி எறிந்தார். அது அவரது இரண்டு கால்களிலும் உள்ள பத்து விரல்களையும் மூடியது. துறவியாக வந்த கோறக்நாத் தன் உண்மை உருவை அப்போது வெளிப்படுத்தினார். நான் தந்த தயிரைச் சாப்பிட்டிருந்தால் நீ கேட்ட வரம் அனைத்தையும் தந்திருப்பேன் வீசி எறிந்த தயிர் உன் காலில் உள்ள 10 விரல்களையும் மூடியதால் 10 தலைமுறைக்கு பின்னர் உன் வம்சம் கூண்டோடு அழியும் என்று தீர்க்க தரிசனம் கூறினார்.

மன்னர் பிரேந்திரா காஞ்சிப்பீடத்தினால் உலக இந்து மன்னனாகப் பிரகடனப்படுத்தப்பட்டவர். உலக இந்துஸ்தாபனத்தை(world hindu federation) ஸ்தாபித்தவர். அத்துடன் இந்துக்களால் கிருஷ்ணரின் அவதாரமாகப் போற்றப்படுகின்றவர்.

இவர்களது ஆத்மா சாந்தி வேண்டி கடந்த 16.06.2001 பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சி கழகமும் சங்கநாதம் சஞ்சிகை வெளியடுவோரும் மற்றும் பல இந்துக்கழகங்களும் இணைந்து பிரார்த்தனை அஞ்சலிக்கூட்டம் ஒன்று நிகழ்த்தினர். இதில் நோபாள நாட்டுக்கான தூதுவர் இந்தியாவின் இந்து அமைப்புக்கள் மற்றும் இலங்கையின் இந்து அமைப்புக்கள் பலவும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். சென்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாதவிவாதம்

சங்கநாதம் முழக்கம் 9 இல் பிரம்மஸ்ரீ வ.சிவகுமாரக்குருக்கள் புண்ணியத்தன்மை வாய்ந்த வேதம் ஆகமம் இதை ஓத ஓதுவிக்க தகுதிவாய்ந்தவன் நான்கு வர்ணங்களில் முதன்மை பெற்றிலங்குவதும் முற்றிலும் சத்துவ குணமாயிருப்பவனுமாகிய பிராமணனே ஆவான். அகவே ஓத உரித்துடையோர். இவற்றைப் பாராயனம் செய்தலே சிறப்புடையது. ஏனையோர் அதாவது பெண்கள் மற்றும் அனைவரும் இதனைப் பாராயனம் செய்தால் அவர்கள் எதிர்பார்ப்பவை பு ரணமாக நிறைவேறா என்று கூறியுள்ளார்.

ஆனால் பின்வரும் மகான்கள் மந்திரத்தைப்பற்றியும் விசேடமாக காயத்திரி மந்திரத்தைப் பற்றியும் என்ன சொல்கிறார்கள் என்று பார்ப்போம்.

1) பகவத்கீதையில் குழுக்கள் என்று பிரித்துக்கூறவில்லை. கிருஷ்ணபகவான் (கீதை viii-12இ13) ஒரு வகுப்பினருக்கோ அல்லது ஒரு பாலினருக்கோ என்று மட்டுப்படுத்தவில்லை. எவரும் உச்சரிக்கலாம் என்கிறார்.

2) சுவாமி விவேகானந்தர் சுக்கில யசுர் வேதத்தினின்றும் எல்லோரும் இம்மந்திரத்தை ஓதத்தகுதியில்லை என்பதற்கு சான்று காட்டமுடியுமா என்று கேட்கிறார். வேதம் முடிந்த முடிவு ஆகையால் காயத்திரி மந்திரத்தை உச்சரிப்பதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. என்று கூறுகிறார்.

3) ஒரு மந்திரத்தினுடைய அர்த்தம் தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் அதை உச்சரிக்கின்றவர்களை அது பக்குவப்படுத்துகிறது. அந்த வல்லமை மந்திரசக்தி என்று சொல்லப்படுகிறது.தெய்வத்தைக் கருத்திற்கொள்ளாது தத்துவஉபாசனை பண்ணுபவர்களும் இறை மந்திரமாக (பிரம காயத்திரியை) வைத்துக்கொள்ளாம். இது மனிதனைப் பரமார்த்திகத்தில் உயர்நிலைக்கு எடுத்துச்செல்லவல்லது என்கிறார் ஸ்ரீஇராமகிருஷ்ணர்.அதாவது இந்த மந்திரத்தை சூத்திரர்களும் பெண்களும் உபயோகப்படுத்தக்கூடாது என்பது இடைக்காலத்தில் வந்த கொள்கை. இதைத் தத்துவபூ ர்வமாக வியாக்கியானம் பண்ணுமிடத்து காயத்திரி மந்திரத்தை சரியாக அறிந்து உபயோகப்படுத்த முடியாதவர்கள் சூத்திரர்களாம்..அதை உபயோகப்படுத்துபவர்கள் துவிஜர்களாகும். துவிஞர்கள் என்றால் இரு பிறப்பாளர்கள்.

4) ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் காயத்திரி என்னும் நூலில் காயத்திரி மந்திரம் பிரார்த்தனையாகவும் தியான சுலோகமாகவும் அமைந்திருக்கிறது என்று கூறினார். துறவிகள் உட்பட வழிபாடு செய்கின்ற மக்கள் எல்லோருக்கும் பொதுவாக இருப்பது சூரிய காயத்திரி.

ஆகவே இந்த மந்திரத்தை மக்கள் எல்லோருக்கும் பொதுவுடைமையாக்குவது முறை. அதை ஓதவும் உண்ணவும் உணரவும் எல்லோரையும் தூண்டுவது சான்றோர் செயல்.நாடு அழிவை நோக்கிச் செல்லும் இக்கால கட்டத்தில் இதைப் பயன்படுத்துவதற்கு கூட்டுவழிபாடு செய்வது சாலச்சிறந்தது. அதை விடுத்துச் சாதி.மத.பால் பாகுபாடு பார்த்து இது கூடாது முடியாது நிறைவேறாது என்ற எதிர்க்கருத்துக்களைக் கூறுவது மடைமையாகும்.

ரதி சிவபாலன். திருக்கோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நரம்புத் தளர்ச்சியை தடுக்கும் வழி

சங்கச் சான்றோன் மாட்சியில் பெரியோரை வியத்தலும் இலமே-சிறியோரை இகழ்தல் அதனிலும் இலமே என்று தமிழர் நாகரிகத்திற்கு அளவுகோல் தந்துள்ளார். அடுத்தபடியாகத் திருமூலர் தியானத்தைக் கூறுகின்றார். ஆசைகள் அறுத்த நிலையிலே தியானம் கைகூடுவதற்கு மிகவும் கடுமையான சாதனை வேண்டும். எத்தனையோ பிறவிகளில் செய்த புண்ணிய பலனால் சற்க் குருவின் கடாட்சம் கிடைக்கப்பெற்று இயம நியம ஆசன பிராணாயாம் பிரத்தியாகார தாரணப் படிகளைத் தாண்டியே தியானத்திற்கு வரமுடியும். தியான நிலை

கைகூடில் எந்தவித இக்கட்டு நிலையிலிருந்தும் விடுபட முடியும். நாடி நரம்புகள் தளர்ச்சியற்று மிக உன்னத நிலையில் இருக்கும். தியானநிலை கைகூடிய ஒருவருக்கு எதையும் சாதிக்கமுடியும். எனவே தான் திருமூலர் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

" ஆனை துரத்திலென் அம்பூ டறுக்கிலென்
காணத்துழவை கலைத்து வளைக்கலென்
ஏனப்பதியில் எம்பெருமான் வைத்த
ஞானத்துழவினை நான் உழுவேனே"

திருமந்திரம்

திருமூலர் காலத்தில் ஆனை புலி அம்பு முதலியவற்றால் மனிதருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கலாம். ஆனால் இன்று எமக்கு குண்டுகள் ஷெல்கள் துவக்குச்சூடுகள் கத்திக்குத்துகள் தடியடிப் பிரயோகங்கள் பாலுறவு வதைகள் போன்ற பயங்கரங்கள் அன்றாடம் நடந்துகொண்டிருக்கின்றன இவற்றை தாங்கவும் தடுக்கவும் தியானம் முற்றுமுழுதாக உதவுகின்றது. 1983ம் ஆண்டுக்கலவரத்தில் எனது தலை மேல் கத்தி வைக்கப்பட்டது இரும்பு உலக்கை தலை மேல் ஓங்கி அடிவிழும் நிலையிலிருந்தது. பக்கவாட்டில் எட்டுப்பேர் பலவித ஆயதங்களுடன் பேயாட்டம் ஆடிக்கொண்டிருந்தனர். ஆனால் அந்த ஆயதங்களால் எனக்கு எந்தவிதமான காயங்களும் ஏற்படவில்லை. ஏனெனில் எனது மனம் உள்நிலையில் இருந்தது. அந்த உள்நிலையை ஞானத்துழவு தருகின்றது. ஏனப்பதி என்று திருமூலர் தமதுடம்பைக் கூறுகின்றார். அதில் ஏறி இறங்கும் சுவாசத்தில் பிராணனை மூலாதாரத்திலிருந்து சகஸ்ராரத்துக்கு ஏற்றி சகஸ்ராரத்திலிருந்து மறுபடி மூலாதாரத்திற்கு இறக்கும் சாதனையைத் திருமூலர் ஞானத்துழவு என்று சித்தர் பரிபாஷையில் கூறுகிறார். ஆசை அறுப்பதும் ஞானத்துழவை உழுவதும் எவராலும் செய்யமுடியும் அதற்குப் பணம் தேவையில்லை பதவி தேவையில்லை. எங்கும் அலையவும் வேண்டியதில்லை.இன்றைய நிலையில் எம்மைக் காப்பதற்கு ஆத்மீக கவசம் அவசியம் தேவை. அது ஆசை அறுப்பதாலும் தியானத்தாலுமே கைகூடும்.

திருமூலர் சங்கம.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானகோஷம்



போலுடைய விளக்கத்தின் அடிப்படையில் போல் ஒரு நாளும் யேசுவை நேரடியாகச் சந்திக்கவில்லை. இயேசு மட்டும் இறைவனுடைய புதல்வன் என குறிப்பிட்டார். இயேசு என்பவர் மட்டும் இறைவனுடைய புதல்வன் என்று நாங்கள் நம்ப முடியுமா? இந்துமதத் தத்துவப்படி எல்லா ஜீவராசிகளும் கடவுளின் பிள்ளைகள். ஆனாலும் உண்மையில் நான் ஒருவனே கடவுளின் மகன் என்று இயேசு கூறவில்லை. இயேசுவின் போதனை களைப்போல் மாற்றிவிட்டார். இயேசுவின் மறைவுக்குப் பின் இம்மாற்றங்கள் நடைபெற்றன. இயேசுவின் சகோதரன் ஜேம்ஸ். போலுடைய போதனைகளைக் கடுமையாகக் கண்டித்தார். இச்சமாச்சாரம் சாக்கடல் ஏடுகளில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இயேசுவிற்கு ஒரு புதுச்சமயம் உண்டாக்கப்பட வேண்டும் என்ற நோக்கம் இல்லை. பைபிளின் ஒருபகுதியில் ஒரு நோயாளியின் நோயைத் தீர்க்கமறுத்தார். அவர் எங்களுடைய கோத்திரத்தைச் சேர்ந்தவர் இல்லை என்று விமர்சித்தார். இயேசு யூதர் சமுதாயத்தில் சில அர்த்தமுள்ள மாற்றங்கள் ஏற்படுத்த முயற்சி செய்தார் வேறொன்றுமில்லை.

பைபிளைப் பொறுத்தவரையில் இரு பாகங்கள் காணப்படுகின்றன. பழைய புதிய ஏற்பாடுகள். புதிய ஏற்பாட்டைவிட பழைய ஏற்பாடு மிகப்பெரியது . பழையஏற்பாடு என்பது சுமார் இரண்டாயிரம் வருடங்கள் (இயேசு யூ தர்சமுதாயத்தின் காலம் வரை) ஒரு சரித்திரம். புதிய ஏற்பாடு இயேசுவின் உடைய பாலர் பருவம் மற்றும் அவருடைய கடைசி ஆண்டுகள் பற்றிய விளக்கம். விளக்கங்களிடையில் சிலமுக்கியமான பேதங்கள் காணப்படுகின்றன. இதை ஏற்கனவேஆராய்ந்தோம். பழைய ஏற்பாட்டில் எத்தனை முறை இயேசுவின் நாமம் காணப்படுகிறது? முழுப்பழைய ஏற்பாட்டில் எந்த ஒருவரிடமும் இயேசுவின் நாமம் காணமுடியவில்லை. இச்செய்தியைக் கேட்டவர் சிலர் ஆச்சரியப்படுவாகள். பழைய ஏற்பாட்டில் கடவுள் ஜெகோவா என்று அழைக்கப் படுகிறார். இயேசுவின் பெயர் வரவில்லை இல்லை. இச்சூழ்நிலையில் இயேசு கிறிஸ்து மூலம் என்னைச் சேரலாம். எவ்வாறு கடவுள் பிரகடனம் செய்யமுடியும்? அப்படி என்றாலும் பழைய ஏற்பாட்டைச் சேர்ந்தவர்கள் மற்றும் அக்கால முழு உலக மக்கள் எல்லோரும் நரகத்திற்குப் போனார்கள். காரணம் என்னவென்றால் இயேசுவைப் பற்றிக் கேள்விப் படவில்லை. இயேசுவை வணங்க வில்லை. படைப்பவர் இவ்வாறான உலகத்தைப் படைப்பாரா?

இதை நாம் சிந்திக்கவேண்டும். ஆகவே நாங்கள் தெளிவாகத்தெரியவேண்டும் இயேசு மூலம் மட்டும் கடவுளைச்சேரலாம் என்ற கொள்கை இந்துக்கள் ஏற்றுக் கொள்ள முடியாது.

வண. சுவாமி திந்திரதேவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாட்சணியாரின்

# காமசூத்ரா

காமசூத்திரா என்றவுடனே முகம் சுழிப்பவர்கள் போலிதாரிகள் என்றே கூறவேண்டும் . உள்ளொன்று வைத்துச் செயற்படுபவர்கள் என்றே கூறவேண்டும்.

ஏனெனில் அர்த்தமுள்ள இந்துமதம் காமசூத்திராவை தெய்வீகத்தனமாகத்தான் வடித்துள்ளது.ஏனெனில் அதிலிருந்துதான் எமது பெற்றோர் வந்தனர் நாம் வந்தோம். உலகஇயக்கம் வந்தது. எனவேதான் கோரக்நாதர் என்ற மகாமுனிவர் கன மனிதர் இல்லையேல் கோயில்ஏது என்று பாடினார். கோவில் இல்லையேல் கனமனிதர் ஏது எனக்கேட்கவில்லை. ஏனெனில் உலகஇயக்கமும் தடைப்பட்டுப்போன பின்னர் இறைவனுக்கு என்னவேலை? என்று கேட்கிறார் கோரக்நாதர்.சுவாமி இராமகிருஷ்ணபரமகம்சரை எல்லோருக்கும் தெரியும் .அவர் சுவாமி விவேகானந்தரின் குரு ஆவார்.

அன்னை சாரதாம்பாள் அவரின் மனைவி ஆகும். தான் கட்டிய மனைவியைத் தேவியாக அம்பாளாக ஒருநாள் தானும் உடலுறவு கொள்ளாதவர். காளியை இஷ்டதேவதையாகக் கொள்பவர்.காளியுடன் நேரடியாகப் பேசியவர். காளிதேவிக்கு உணவு ஊட்டியவர். இவை இத்தனையும் முற்றிலும் நடந்த உண்மை. தன்னுடைய தபோ வலிமையால் திராடகம் என்ற பயிற்சியைச் செய்து தனது உடல் முழுவதும் ஒளிபெறச் செய்தவர் . யோகங்கள் மூன்று வகைப்படும். அவையாவன



1) தாந்ரீகயோகம்
2) மாந்ரீகயோகம்
3) யாந்ரீகயோகம்

மாந்ரீகயோகம் என்பது ஜெபயோகம் என்பதாகும். . யாந்ரீகயோகம் என்பது விக்கிரங்களையும் ஆராதனைகளையும் குறிக்கும். தாந்ரீகம் என்பது இறைவனுக்கு வில்வஇலையும் விஷ்னுவுக்கு துளசி இலையும் லக்ஷ்மிக்கு செந்தாமரையும் இதர சமித்துக்களையும் கொண்டு யாகம் வளர்ப்பதாகும். இப்போது விடையத்திற்கு வருவோம். நாஷ்டிக பிரம்மச்சரியான இராமகிருஷ்ண பரமகம்சரை பிரமணி அம்மாள் என அழைக்கக்கூடிய அம்மணி சந்திக்கிறாள். அருக்கு உபதேசம் செய்கிறார். கண்ணீர் மல்க உபதேசங்களைச் சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கிறார். அதில் தாந்திரீக யோகத்தைப பூர்த்தி செய்யாமல் உன் தவவலிமை பூர்த்தி அடையாது எனக்கூறிக் கழுகு ஆமையோடு முதலையின் தலை போன்ற பஞ்சகபாலங்களைக் கொண்டு மண்மேடை அமைத்துத் தியானம் சொல்லிக் கொடுக்கிறாள். அதன் படி சுவாமியும் தவம் செய்கிறார் பஞ்ச பூதங்களையும் தன் வசமாக்கும் வல்லமை பெறுகிறார்.

அது மட்டுமா பிரமணிஅம்மாளுடன் இருந்த கன்னிப்பெண் ஒருத்தியைப் பரிவாங்கயோகம் என்னும் தாந்ரீகயோகத்தைச் செயற்படுத்த அம்மணி கூறுகிறார். இராமகிருஷ்ண பரமகம்சர் உலகத்தில் உள்ள அனைத்துப்பெண்களும் எனக்குத்தாயாகத் தெரிகின்றவேளையில் நான் எப்படி இந்த பரிவாங்கயோகத்தை செயற்படுத்த முடியும் எனக்கதறி அழுகிறார். பிரமணி அம்மாள் இராமகிருஷ்ண பரமகம்சரை சமாதானம் செய்து அப்பெண்னுடன் பிரிவாங்கயோகத்தை செயல்படுத்த வைக்கிறார். இங்கு பரிவாங்க யோகம் என்றால் என்ன எனும் கேள்வி எழுகின்றது? பரிவாங்கயோகம் என்றால் ரிஷிகளும் முனிவர்களும் சித்தர்களும் நடாத்திய சம்போக தியானமாகும். ஆண் பெண்னுடன் உடலுறவு கொள்ளும்போது பெண்ணவளின் சோணித்தரை அஸ்சவினி முத்திரை மூலம் ஊசி முனையளவு லிங்கத்தால் வஜ்ரோலி முத்திரை கொண்டு அருந்தும்போது ஓம்சக்தி மகாசக்தி குண்டெலனி சக்தி விழித்தெழுந்து சகஸ்ராவை நோக்கி ஊர்ந்து செல்லும். இதை ஒரு குரு மூலமாகத்தான் கற்றுக்கொள்ளமுடியும். அதன் மூலம் அற்புத அதிசயக்கத் தபோவலிமையை ஒரு தவசி அடையமுடியும். இதற்குப் பெயரே பரிவாங்கயோகம் ஆகும். இதனையே நித்தம் நித்தம் அரவம் சென்று வரும் தேன் புற்றே என்று கோரக்நாதர் ஒருபாடலில் எடுத்துரைக்கின்றார். அப்படியானால் அந்தத்தேன்புற்றுஎது? நித்தம் சென்றுவரும் அரவம் எது? அரவம் என்றால் அதுபாம்பையும் குறிக்கும் சிவலிங்கத் தத்துவமும் இதுவே. எனவேதான் வாட்சனியர் காமசூத்திராவை தெய்வீகக்கலையாக வடித்தார்.

தொடரும்..........

ஆக்கம்

Dr. P.A. Suresh (S.M.P)
India, Hatton.



டாக்டர் நோயாளியிடம: தோல்விதானே வெற்றியின் முதல்ப்படி..?
நோயாளி: ஆமாம் டாக்டர்...ஏன் கேட்கிறீங்க?
டாக்டர்: இல்லை உங்களுக்கு நான் ஆப்பிரேசன் செய்து வெற்றியின் முதல்படியில் கால் வைக்கப்போகிறேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவநெறி தான்பெற்ற கண்ணிரெண்டு

நாட்டிலே புகழனாருக்கும் மாதினியாருக்கும் புதல்வனாகப்பிறந்த அப்பர் சிறுவயதிலேயே தாய் தந்தையரை இழந்து தன் தமக்கையை மறந்து சமணசமயத்திற்கு மாறினார்.அங்கே தன்திறமை காரணமாகத் தருமசேனர் என்று பட்டம்பெற்றார். பின்இறைவன் திருவிளையாடலினால் சூலை நோயால்வருந்தி மீண்டும் சைவசமயத்திற்கு வந்தார். நாவிற்கு இனிய பாடல்களைப் பாடியதனால் நாவுக்கரசர்என்ற பெயரை இறைவனால் அருளப்பெற்றார். அதன் பின் எண்பத்தியொரு ஆண்டுகள் என்கடன்பணி செய்துகிடப்பதே என்றகொள்கையில் வாழ்ந்தார். இதனால் இவர் அடைந்த துன்பத்திற்கோ அளவில்லை. நாயன்மார்களிடையே அனுபவ முதிர்ச்சிபெற்ற ஒரேயொருவர் இவர் என்றால் அது மிகையாகாது. இவர் தன் பாடல்களிலே இயற்கை வர்ணனைகளுக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க வில்லை. ஆனால் இவரது பாடல்களைப்படிப்பவர் கண்முன்னே இறைவனின் முழுவடிவையும் கொண்டு வந்துநிறுத்தும் ஆற்றலைக் காணலாம். உதாரணமாக

கங்கையைச் சடையுள் வைத்தார்
கதிர் பொறி அரவம் வைத்தார்
திங்களைத் திகழ வைத்தார்
திசை திசை தொழவும் வைத்தார்
மங்கையைப்பாகம் வைத்தார்
மான்மதி மழுவும் வைத்தார்
அங்கையுள் அனலும் வைத்தார்
ஐயன் ஐயானாரே

என்ற பாடலைக் குறிப்பிடலாம்

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர்கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்

இவ்வாறு இவ்விரு நாயன்மார்களும் நம் சமயத்திற்கு அளப்பரிய தொண்டுகள் ஆற்றிப்பல கீர்த்தனைகள் பாடி நம் சைவசமயத்ததை வளர்த்தனர்.இந்துக்களாகிய நாமும் அவர்கள் காட்டிய வழியிலேயே வாழ்ந்து சைவத்தை வளர்ப்போமாக.

ஆக்கம்
ப.புஸ்பகுமார்.
மாத்தளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலாவலம் வரும் சங்கு

மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்துக் கிராமங்களில் திட்டமிட்ட மதமாற்ற முயற்சிகளால் இந்துக்களின் அவலநிலை.

1) மாங்கேணி-வாகரை: மாங்கேணிக் கிராமத்தில் உள்ள பாடசாலையில் கிறிஸ்தவ அதிபப் பெண்மணி கடமை புரிந்து வருகிறார்.இவர் அண்மைக்காலத்தில் கிறிஸ்தவ தேவாலயத்தில் ஆராதனையை மேற்கொண்டுள்ளார். இதற்கு இந்துப் பிள்ளைகளையும் அழைத்துச் சென்று இந்துப் பிள்ளைகளின் கைகளில் சிலுவைச் சின்னத்தைக் கட்டி கிறிஸ்தவத்தைப் போதித்து அனுப்பியுள்ளார். அத்தோடு அடிக்கடி கிறிஸ்தவ மதப்பிரிவினர் தொண்டர் நிறுவனம் என்ற ரீதியில் உதவி வழங்கும் போதும் தமது மதப் பிரச்சாரத்தையும் தமது பாலர் பாடசாலைகளில் கட்டாயமாகக் கிறிஸ்தவ போதனைகள் வழிபாட்டு முயற்சிகளுக்கும் வழிவகுத்து வந்தனர். இவைகள் அங்குள்ள இந்து அமைப்புக்களாலும் பிரமுகர்களாலும் கண்காணிக்கப்பட்டது.இதன் பின்னர் மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவைமூலம் ஸ்ரீமத் சுவாமி தந்திரதேவா விஜயம் செய்து ஆன்மீக உரை வழங்கி தற்போது மதமாற்ற நிலையைக் குறைத்துள்ளார்.

2) மதுரங்குளம்-வாகரை: இக்கிராமம் மிக வறிய கிராமமாகும். அடிப்படைவசதிகள் இன்றி வறுமையில் வாழ்கின்றனர்.இங்கு கிறிஸ்தவ அமைப்புக்கள் பல உதவிகளை வழங்கும் இதேவேளை பாடசாலைகளில் கிறிஸ்தவப் போதனைகள் உட்பட மதமாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அத்தோடு கிராம மக்களுக்கும் உதவியை வழங்குவதன் மூலம் மதமாற்ற முயற்சிகளை மேற்கொண்டனர். இம் முயற்சி. பேரவையின் கவனத்திற்கு கொண்டு வந்த போது அதைத்தடுத்து வைத்தபேரவை பலவசதிகளைச் செய்ததைத் தொடர்ந்து தற்போது அது ஓரளவு குறைந்துள்ளது. அதேவேளை திருச்சபையினரும் இங்கு சென்று மதமாற்ற மாத்தளை நகரில் நடைபெற்ற மாபெரும் கலை விழா


நண்பனுக்க உயிரைக்கொடுப்பது எளிது -ஆனால் உயிரைக் கொடுப்பதற்கு ஏற்ற நண்பன் கிடைப்பது அரிது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயத்தின் அர்த்தத்தை அறிவோம்

பேராசிரியர்.பொன். சக்திவேல்



ஐரோப்பிய நாடுகளில் முதன்முதலாக இந்துமரபில் அமைந்த மந்திர் கட்டிடம் முழுவதும் பழைய சிற்ப சாஸ்திர முறையில் அமைந்துள்ளது. இவ் ஆலயஅமைப்புக்களுக்கு எந்த உலோகங்களும் பாவிக்கப் படவில்லை. 2828 தொன் நிறையுடைய பல்கேரிய சுண்ணாம்புக் கற்களும் 2000தொன் நிறையுடைய கராரமாபிள்களும் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டு சிற்ப செதுக்கங்கள் வெட்டப்பட்டு லண்டன் மாநகரத்திற்கு அனுப்பப்பட்டு அமைக்கப்பட்டது.

26300 சிற்பசெதுக்கங்களைக் கொண்ட இந்த மந்திர் வியப்படையச்செய்யும் முறையில் மூன்று ஆண்டுகளில் கட்டப்பட்டு உள்ளது. நவீன காலத்தின் விந்தையான தோற்றம் கொண்ட மந்திர் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொண்டர் மூலம் ஆத்ம உணர்ச்சி யுடன் பூ ஜாபராமுக் சுவாமி மகராஜ் அவர்களால் ஆன்மீக முன்னேற்ற முறையில் அமைத்துள்ளார். ஸ்ரீ சுவாமி நாராயண் ஐந்தாவது தலைமுறைத்தலைவர். இந்து சமயத்தின் அர்த்தங்கள் எனும் கண்காட்சி மண்டபமும் இவ் ஆலயத்தின் கீழே உள்ளது. இந்து சமயத்தின் ஆரம்பம். இந்து மதத்தின் உண்மைகள் யாவும் விளக்கமாக உள்ளது. இந்து மதம் சகிப்புத்தன்மையையும் வளைந்துகொடுக்கும் தன்மையையும் சமாதானத்தை விரும்புவோரையும் கொண்ட மதம். இதன் மூலஇடமாக இந்தியாவும் சிந்துவெளியும் ஆகும். சிந்துவெளி நாகரிகத்தின் மக்கள் 5000ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்துள்ளனர். இந்து மதம் படைக்கப் படவில்லை மக்களின் தவத்தினாலும் வழிபாட்டினாலும் உருவாகிற்று. இவ்வகை அனுபவங்களைக் கொண்டு வளர்ந்ததே வேதாந்த நாகரீகம் அதுவே இந்து தர்மம்.

இந்து மதத்தின் நாகரிகம்-பழங்காலத்தில் சீனா நாடு கூடஇதைப்பற்றிச் சிந்திக்கவில்லை. எகிப்து கூட அறிய முற்பட வில்லை. நாம் கிறிஸ்தவ நாடு என்பது பற்றி ஐரோப்பிய நாடுகள் சிந்திக்கவில்லைப் போலும்.இந்தியா தான் நாகரிகத்தின் வெற்றிச் சின்னமாக மிளிருவதுதான் இந்துமதம் என ஜே.மில்லர் கூறுகிறார்.5000ம் ஆண்டுகளுக்கு முன் இந்திய நாகரிகம் 300 குடியிருப்புகளுடன் ஆரம்பமானது. இக் குடியிருப்பு 1520 கிலோ மைல் சதுர அளவை கொண்டது. இக் கிராம வீடுகள் யாவும் களிமண்ணால் கட்டப்பட்டது. இக் கட்டிட அமைப்பே உன்னதமானது என ஹரப்பாநாட்டின் நாகரிகம் கூறுகிறது. இவ் வீடுகள் யாவும் சீரான முன்னேற்பாடுகளுடன் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு வீட்டிலும் அதிகமான அறைகளும் பெரிய தங்குமிடங்களும் உள்ளன. அக்கால றோட்டுக்கள் 80அடி அகலமானதாக உள்ளது. இவ்வகை நாகிரிகம் இந்து தர்மம் ஹரப்பா, மொகஞ்சதரோவில் காணப்படுவதாக இங்குள்ள செப்புத்தகட்டில் எழுதப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கிய வாழ்விற்கு ஆன்மீக மூலிகைகள்

முடி உதிர்வதைத் தடுக்கவும் வார்ச்சடையாத்தாள் எனப் பெயர் எடுக்கவும் வீட்டிலேயே கைபாகம் செய்பாகம் முறைப்படி தானே தயாரித்துக்கொள்ளும் கூந்தல் தைலம்.

உஷ்ண பிரதேசங்களில் கரி சாலை என்ற வழக்கச் சொல்லும் உண்டு. கீக்கிரிந்த என்று சிங்களத்தில் அழைப்பார்கள். கொழும்பு போன்ற உஷ்ண பிரதேசங்களில் சாலை ஓரமாகச் சர்வ சாதாராணமாக இதைக் காணலாம். அதைச் சமூலமாக (சமூலம் என்றாள் பூ .வேர்.தண்டு) பிடிங்கி வந்து அலசி எடுத்து ஒரு குவளை சாறுக்கு மூன்று குவளை தேங்காய் எண்ணெய் எடுத்துச் சிடு சிடுப்பு அடங்கும் வரை ஒரு சிட்டிகை (டீஸ்பூன்) சுக்கு சூரனத்தை விட்டு வடித்து எடுத்து வைத்துக்கொண்டு தினமும் கூந்தலுக்குப் பூசிவர ஆறுமாதங்களில் முடி கருகருவென வளர்ந்து வார்ச்சடையாத்தாள் எனப் பெயர் எடுக்கலாம்.

## புதிய நூற்றாண்டில் புதிய நூலகம் உதயமாகியது.

கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் புதிய நூலகம் கடந்த 28.5.01 திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது. யாவரும் சென்று பயனடையும் வகையில் இந்நூலகம் அமைந்துள்ளது. இவ்நூலகம் பல நூற்றாண்டுகாலம் சேவை புரியவேண்டும் என்று சனாதன தர்ம யுவ வழிப்புணர்ச்சிக்கழகம் சங்கநாதம் இணைந்து வாழ்த்துகின்றன.

## மாத்தளை நகரில் நடைபெற்ற மாபெரும் கலைவிழா

சனாதன தர்மக் கழக மாத்தளைக் கிளையினால் கடந்த 19.05.01 சனிக்கிழமை கலைவிழா வெகு சிறப்பாக நடாத்தப்பட்டது. இக்கலைவிழாவில் மலையகத்தின் கலைகலாச்சாரத்தைப் பின்னனியாகக் கொண்டு பல கலைநிகழ்வுகள் நடைபெற்றது. அத்துடன் சுவடுகள் என்ற மலரும் வெளியிடப்பட்டது.இதில் பங்குபற்றிய,கலந்துகொண்ட அனைவருக்கும் சனாதன தர்ம யுவ விழிப்பு ணர்ச்சிக்கழகம் (மாத்தளை,கொழும்பு). சங்கநாதம் ஆகியன இணைந்து நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

**பகைமையை அன்பினால் வெல்லுங்கள்; சோம்பலை செயலூக்கத்தினால் வெல்லுங்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாரங்களில் சிவனுருவம்

தேவாரங்கள் சிவனுடைய புகழைக் கூறுபவையாகும். இவ்வாறு புகழப்படும் சிவனின் உருவம் எவ்வாறு இருக்குமென்பதை நாயன்மார்கள் பல்வேறு வகையில் தமது பாடல்களில் பாடியுள்ளனர்.சிவனின் சாதாரண மௌலிசடாமுடி.நடராஜ தோற்றம் .வீரபத்திரத்தோற்றம் போன்ற பல தோற்றங்களைப் பற்றிப் பாடியுள்ளனர்.

சிவனின் சாதாரண தோற்றம் பிறையுடன் கூடிய சடாமுடி. சடாமுடியில் கங்கை நெற்றிக்கண் ஒரு பாகமாகக் கொண்டுள்ளது. திரிசூலம் ஏந்திய கையுடன் தோன்றும் தோற்றமாகும். அத்துடன் அவரின் வாகனமாக இடபத்தையும் கொண்டது ஆகும். இத்தகைய சாதாரண வடிவத்தைத் தேவாரமுதலிகள் நன்கு பல இடங்களில் வர்ணித்துள்ளனர்சம்பந்தர் பெருமான்.

**தோடுடைய செவியன் விடையேறியோர்**
**தூவவெண் மதி சூடிக்**
**காடுடைய சுடலைப் பொடி பூசி**

என்று காதிலே தோடு அணிந்தும் தூய வெண்மதி சூடியும் மயானத்தில் உள்ள சாம்பலைப் பூசி உள்ளவர் என வர்ணிக்கின்றார் மேலும் ஒரு பாடலிலே

**நீர் பரந்த நிமிர் புன்சடை மேலோர்**
**நிலா வெண்மதி சூடி**

என்று சடையின் மேல் கங்கையைக் கொண்டு இருப்பதையும் மற்றுமொரு பாடலிலே

***மங்கை மணந்த மார்பர்***
***மழுவாள் சடையர் கரந்தார்***

என்று ஒரு பாகத்தில் உமையை கொண்டு விளங்குவதையும்கையிலே மழு.வாள் போன்ற ஆயதங்களை ஏந்தி இருப்பதையும் வர்ணித்து உள்ளார்.சுந்தரமூர்த்தி நாயனார் மருவார் கொன்றை மதிசூடி...என்றும் வெண்புரி நூல்மார்பர் என்றும்.அப்பர் சுவாமிகள் வடிவேலு திரிசூலம் தோன்றும் தோன்றும் என்றும் ...காதில் வெண்குழை தோடும் கலந்து தோன்றும் என்றும் சிவனின் சாதாராண வடிவத்தைத் தமது தேவாரங்களில் ஆங்காங்கே வைத்துப் பாடியுள்ளார் அப்பர் சுவாமிகள்.



(தொகுப்பு)
S.உஷா
(சனாதன தர்மக் கழகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஞ்சநேயரின் மகிமை

உலகெங்கும் பரந்து வாழும் ஸ்ரீ ஆஞ்சநேயபகத்தர்கள் அவைரும். இன்று இலங்கையில் ஸ்ரீ சந்திரசேகர சுவாமிகளின் விடாப்பிடியான முயற்சியாலும் பக்தர்கள் வாரிவழங்கிய நிதியினாலும் ஸ்ரீ ஹனுக்கு ஆலய அமைப்பிற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

சமுத்திரம் கரை புரண்டாலும் மந்திர மலையே அசைந்து ஆடினாலும் ஸ்ரீ ராமபக்த அனுமனின்பக்தி பலம் தைரியம் அபயத்வம்.ஆரோக்கியம் வாக்படுத்வம் ஏழும் ஒவ்வொரு பக்தரையும் காப்பாற்றும்வெள்ளம் போன்ற பக்தர்களின் அதிக பக்தி வலிமையாலும் ஸ்ரீ சந்திரசேகர சுவாமியவர்களின் மன்றாட்டத்தினாலும் சமயாச்சாரிகளின் வழிகாட்டலினாலும். பஜனை பிரார்த்தனை வழிபாடு ஆகிய இன்னோரன்ன முயற்சியினால் இது ஒரு தெய்வீக மணங்கமழும் திருத்தலமாக மாறியுள்ளது இவ்வாலயம் நிர்மாணிக்கப்படுவதற்கு



"நிதி மிகுந்தவர் பொற்குவைதாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்
அதுமற்றவர் வாய்ச் சொல் அருளீர்
ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்"

\- மகாகவி பாரதியார்

"ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தால் செயின்"

\- திருக்குறள்

சுபமங்களம் - ஜெயமங்களம்.

ஸ்ரீ ஆஞ்சனேயர் ஆலயம் அறங்காவலர்கள்
3/11 போதிருக்காராம றோட்.
(விகாரை லேன்.வெள்ளவத்தை)
களுபோவிலை - தெகிவளை
T.P: 726444
FAX:074-202604

காலதத்தைத் தள்ளிப்போடாதீர்கள் தாமதத்தின் முடிவுகள் ஆபத்தானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனாதன தர்மத்தில் பெண்களின் பங்கு

பல நூல்கள் புராணங்கள் சைவசித்தாந்தம் வேதங்கள் திருமுறைகள் சனாதன தர்மம் பற்றி வலியுறுத்த அதனை இல்வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தியவர்கள் பெண்கள் என்பதைப் பெரிய புராணம் மூலமாக அறியக்கிடக்கிறது. அண்மைக்காலத்தில் வாழ்ந்த மோகனகாந்தியியை மகாத்மா காந்தியாகக் கொண்டு வந்தவர் காந்தியின் தாயார் ஆகும்.

அதேபோன்றே சுவாமி விவேகானந்தரை உருவாக்கியதும் அவருடைய தாயாரே.சிறுவயதாக இருந்த காலத்தில் தாயார் நல்ல நல்ல அறநெறிக்கருத்துக்களை கூறியமையால். பிற்காலத்தில் பாரத கண்டத்தில் மட்டுமன்றி அகிலஉலகெங்கும் சுவாமி அறநெறிப்பண்புகளைப் பிரசங்கம் செய்தும் ஞானச்சுடர் மூலம் நிலை நாட்டினார். சுவாமி விவேகானந்தர் பாரதப்பெண்களின் சனாதன தர்ம நெறி வாழ்க்கையின் பண்புகளை மேலைத்தேசமெங்கும் பிரசங்கம் மூலம் முழங்கினார்.எனவே சனாதன தர்மம் என்பது வெறும் பேச்சிலும் எழுத்திலும் இல்லை. சாதனையிலும் அனுட்டான அனுபவங்களிலுமே அடங்கியுள்ளது.சனாதன தர்மம் கிரேதாயுகத்தில் மிகுந்து காணப்பட்டது.

மக்கள் தர்மத்தை உயிரினும் மேலாக நேசித்தமையால் அக்காலத்தில் மக்களிடையே நல்ல சக்திகள் மிகுந்து காணப்பட்டது. திரோத்யுகத்தில் காற்பங்க தீயவை தீண்டியமையால் மக்கள் அமைதியின்றிக் காணப்பட்டனர். துவாரகயுகத்தில் அரைப்பங்கும் கலியுகத்தில் முற்காற் பங்கும் தீயசக்திகள் காணப்படுகின்றன. இதனால் மனித சமுதாயம் ஆன்மீக ஆத்மீக வலிமைகுன்றி அமைதியின்றி எந்நாளும் தீயசக்திகளை மறைமுகமாக அனுட்டிக்கப்படுகின்றன.மறைமுகமான எதிர்பார்ப்புகள் பொறாமை பதவி புகழ் பணஆசைகளாள் மனம் சஞ்சலம் கொள்கின்றனர்.சனாதன தர்மம் உள்ளத்தில் நிறைந்து புறத்தில் சாதனை. சேவை பணிவுடமைகளிற் புலப்படுத்தினால் பூ ரணமனிதனாகி ஆன்மீக ஆத்மீகத்தில் நின்று சீவன் முத்தராகி விடுவதனால் உலகம் பெருமையடைந்து விடுகின்றது என்பதைச் சனாதனதர்மச் சாதனைகள் விளம்புகின்றன.

முற்றும்.

தொகுப்பு:

ஸ்ரீ விஷ்வமாதாஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமநாதக்குருக்களுடன் ஓர் நேர்காணல்

ஆலயங்களில் பற்றுச்சீட்டு மூலம் காசு வாங்குவது சரியா?

ராஜாக்களை பார்க்கப்போகும் போது வெற்றுக்கையுடன் செல்லக்கூடாது.தேங்காய்பழம் கொண்டுசெல்லவேண்டும். என்பது விதி.அவ்வாறே கடவுளை தரிசிக்கும் போது வெற்றிலை, பழம், கற்பூ ரம் அல்லது ஊதுபத்திபூ கொண்டு போவது வழக்கம்.ஆனால் பிற்காலத்தில் ஆலயதர்மகர்த்தாக்களும், அதை சார்ந்தவர்களும் தங்கள் வசதிக்காக பற்றுச்சீட்டை போட்டுக் கொள்கின்றனர். அந்தக்காலத்தில் 75 சதமாக இருந்த அர்ச்சனை இப்போது 50ரூபாவரை விற்கப்படுகின்றது.ஆனால் 50ரூபா கொடுத்தும் பழுதடைந்த தேங்காய்.வெற்றிலை போன்றவற்றை கொடுத்து அடியார்களை மனவருத்தத்துக்குள்ளாக்குகிறார்கள்.

பூக்கள் எல்லாவற்றையும் குருக்களை வாங்கச்சொல்லு கிறார்கள்.ஆனால் அவர்களுக்கு கொடுக்கும் சம்பளமோ 3000ரூபா. ஆனால் இந்த செலவுகளையும் குருக்கள் தலையில் போட்டு விடுகிறார்கள்.இது ஆலயத்தால் செய்யப்படவேண்டிய செலவு.சூடத்தையும் பூவையும் வாங்கச் சொல்ல அவர்கள் பணம் தேடும் முயற்சியில் ஈடுபடுகிறார்கள்.ஆலயத்தில் பூசைத்தட்டு வந்தால் கொடுக்கும் காணிக்கையை விட்டுவிட்டு அதற்க விலை வைப்பது நன்மையில்லை. இதனால் பல மதமாற்றங்களுக்கு அவர்கள் வழிகாட்டியாக அமைகிறார்கள்.

சிலகோயில்களில் அபிஷேகத்திற்கு அடியார்கள் நேர்ந்துவிட்டு பால்.இளநீர் கொண்டுவந்தாலும் 150ரூபா 200ரூபா தரவேண்டும் என்று கூறுகிறார்கள்.நாங்கள் ஊண்டியல் வைக்கிறோம். அதைவிட காணிக்கைகள் செலுத்துகின்றனர்.அதை நாங்கள் கேட்டு வாங்குவது நல்லதல்ல. சிலகோயில்களில் அபிஷேககாலங்களில் வரும் அடியார்களை அர்ச்சனை செய்யவிடாமல் நிறுத்தகின்றனர்.சில கோயில்களில் பெரும் பணத்தை எதிர்பார்த்துக் கொண்டு அடியார்களை உதாசீனப்படுத்து கிறார்கள்.ஆலயங்களில் அர்ச்சகர்களும் பரிபூரண அதிகாரத்தைக் கொடுக்கவேண்டும்.அவர் அந்த அர்ச்சனையை செய்வதற்கு காசு படைத்த மகான்களை கண்டவுடன் மற்றவர்களை தள்ளி விட்டு முன்னுக்கு கொண்டுவந்து நிறுத்துவது காலை 6மணிமுதல் அபிஷேகத்தைப்பார்ப்பது திருவிழாவைப் பார்ப்பதற்கு நிற்பவர்களை உதாசீனப்படுத்துவதாக அமைகின்றது.கோயில்களை மேலும் மேலும் பணம் சம்பாதிக்கும் நோக்குடன் வயாபரத்தளமாக மாற்றாது பக்தி மார்க்கமான கோயில்களாக மாற்றவேண்டும்.இல்லாவிடின் இது இந்து மதத்தை அழிவுப்பாதையில் இட்டுச்செல்லும்.

தொகுப்பு.

S.ஹரேந்திரன்

(சனாதன தர்மக் கழகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகாசனம்

*ஆரம்ப நிலைகள்:*

தடாசனம் (மலைபோன்று அல்லது நிற்கும்நிலை):
இந்த நிலையே மற்ற எல்லா நிற்கும் நிலைகளுக்கும் அடிப்படை.

*செய்முறை:*

நிமிர்ந்து நிற்க வேண்டும் இரண்டு கால்களையும் ஒன்றுசேர்க்கவேண்டும். காலின் பெருவிரல்கள் குதிங்கால்கள். முழங்கால்கள் முதலியன ஒன்று தொட்டுக்கொண்டு இருக்கவேண்டும். உள்ளங்கைகளைத் திறந்து விரல்கள் தொடைத்தசைகளைத் தொடவேண்டும் நெஞ்சுநிமிர்ந்திருக்கவேண்டும். உடல் பாரம்முழுவதும் குதிங்கால்களிலும் கால்விரல்களிலும் படியவேண்டும். சுவாசம் நிதானமாக இருக்கவேண்டும். கண்களை மூடிக்கொள்ளவேண்டும். வெளிப்புற ஒலிகளைத்தடுக்காது கேட்டுக்கொள்ளவேண்டும். இவ்வாறு இயற்கையுடன் இயைந்திருக்க வேண்டும்.

*நன்மைகள்:*

உடலின் பாரம் குதிங்கால்களிலும். கால்விரல்களிலும் பதிந்துஇருப்பதனால்இலேசான நிலையை உணர்கிறோம். மூச்சு. சீராகவந்து போவதால் மனதில் அமைதி உண்டாகின்றது.

யோகாசனக் குழு

## வாசகர் கருத்து

சங்கநாத இதழை வாசித்தேன். மிக அருமை.எல்லோரின் மனதையும் தொட்டுவிட்ட ஒரு இன்பமான இதழாக என் மனதில் தென்படுகிறது.இதனை வாசிப்பதனால் எங்களைப்போன்ற வாசகர்களுக்கு நல்லதொரு ஆன்மீகநெறியை மனதில் ஏற்படுத்துகிறது.இதில் இன்னும் பல கருத்துக்களைக் வெளிக்கொண்டுவந்து இன்னும் வளர்ச்சியடைய என் வாழ்த்துக்கள்.

மலர்மதி
நிந்தாவூர்.

சைவம் என்பது இன்று மக்களிடையே அருகி வருகிற ஒன்றாக காணப்படுகின்றது.அதனை இப்புத்தகத்தின் மூலம் சமயம் மீதும் நம்பிக்கை வைக்கதுஏதுவாக இருக்கும் இந் நூல் மென்மேலும் வளர என் வாழ்த்துக்கள்.

கமலதர்ஷினி
கொத்மலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய பக்தி

தொகுப்பு: லோ.அனுஷலா
(சனாதன தர்மக் கழகம்)

1.ஒரு காட்டில் ஒரு வேடன் குடும்பத்துடன் வாழ்ந்து வந்தான்.அவன் மிகவும் அவலட்சணமாக இருப்பான





2. அவர்கள் குடும்பத்தினர் வேடனையும் அவன் மனைவியையும் வெறுத்துத் தங்கள் வீட்டிலிருந்தே துரத்திவிட்டனர்.



3. வேடனும் அவன் மனைவியும் காட்டில் அலைந்து திரிந்து துன்புற்றனர்

4.வழியில் ஒரு தாமரைக் குளத்தைக் கண்டனர்.தாமரைக் கிழங்குகளை உண்டு பசியாறினர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



5.அந்தக்குளத்திலிருந்த தாமரைப் பூக்களைப் பறித்துச்சென்று அருகிலிருக்கும் நகரத்தில் விற்றுப் பிழைக்கலாம் என்று தீர்னமானித் தார்கள்.

6. தாமரைப்பூக்களைப் பறித்துச்சென்று விற்பனை செய்யமுயல அவற்றை யாரும் வாங்கவில்லை. பசி தாகத்துடன் தள்ளாடியபடி சென்றவர்கள் ஒருகோயில் வாசலுக்கு வருகின்றனர்.





7. அந்தநகரத்தின் பெரியபணக்காரப் பெண் ஒருத்தி அன்று திருமாலுக்கு திருவிழா நடத்திக்கொண்டிருந்தாள்.

8. வேடுவத்தம்பதிகள் தங்கள் களைப்பு, பசியைமறந்து தாங்கள் கொண்டுவந்த தாமரைப் பூவை திருமாலுக்கு படைத்து வணங்கினார்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



9. அந்தப் பெண் வேடுவத் தம்பதிகளின் பக்தியைக் கண்டுமகிழ்ந்து ஒரு தட்டில் பொற்காசுகளை அள்ளித்தர அதை அவர்கள் மறுத்துவிடுகின்றனர்.



10.அன்றுஇரவு தூய மனத்துடன் உபவாசம் இருந்து திருமாலைப் பூத்தார்கள்.ஆயிரக் கணக்கான ஆண்டுகள் தவம் செய்து ஏற்படும் வைராக்கியம் அந்த ஓர் இரவிலேயே ஏற்ப்பட்டது.

11.திருமால் மனம் மகிழ்ந்து அவர்களுக்குத் தரிசனம் தந்து அருள்கடாற்சம் புரிந்தார்.





12. திருமால் அருளால் மறுபிறப்பில் அத்தம்பதியர் புஷ்பவாகனர் என்ற மன்னராகவும் லாவண்யவதி என்ற பெயருடன் அவருடைய பட்டத்தரசியாகவும் விளங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதமாற்றம் ஆபத்தானது

பாரததேசத்தில் சனாதன தர்மம் இயற்கையாகத் தோன்றிய தொன்றாகும். சனாதன தர்மத்தை மனிதன் உண்டாக்க வில்லை.அதற்கு இந்துமதம் என்று பிறநாட்டவரே பெயர் சூட்டினர். பிறமதங்கள். பிறநாடுகளில் அம்மக்களின் தன்மைக்கும். தேவைக்கும் பொருந்தத் தோன்றின. ஆனால் அம்மதங்கள் சனாதன தர்மத்தை ஆக்கிரமிக்கத் தொடங்கிய போதே மனிதநேயம் குன்றத் தொடங்கியது என்பது அப்பட்டமான உண்மையாகும்.

ஆழ்கடலில் ஆறுகள் சங்கமமாவதுபோல் சனாதன தர்மத்தில் சகல மதங்களும் சங்கமமா கின்றன. சனாதன தர்மம் பிற மதங்களைப் பழித்தது கிடையாது. அவற்றை ஆக்கிரமித்தது கிடையாது. தனது மதத்துக்கு வரும்படி அழைத்தது கிடையாது. பலவந்தியப்படுத்தியதும் இல்லை. ஏனெனில் சனாதன தர்மத்திற்கு எந்தத் தேவையும் இருக்கவில்லை அதன் ஆணிவேர் அன்பும் ஆழ்ந்த அறிவுமேயாகும்.ஏகம்சத் விப்றா பகுதாவதந்தி என்பதே சனாதன தர்மத்தின் அடிப்படைக்கொள்கையாகும்.. உள்ளது ஒன்று பண்டிதர்கள் பலவிதத்தில் கூறினார் என்பதே மேற்படி வாக்கியத்தின் பொருளாகும். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்கிறது திருமந்திரம். மனித குலம் ஒன்று. இறைவன் ஒன்று இதுவே சனாதன தர்மம் கண்ட உண்மையாகும். அன்பின் அடிப்படையில் அனைத்திலும் கடவுளைக் கண்ட சனாதன தர்மத்தைப் பின்வந்த புறச்சமயங்கள் கொச்சைப்படுத்திக் கூறுபோட முற்படுவது மிகவும் வெறுக்கத்தக்த தொன்றாகும். இது மிகவும் ஆபத்தானதும் அநாகரீகமானதும் என்பது வெள்ளிடைமலை. ஒருவனைப் பெற்றதாய் சரியில்லை யென்று அவளைக் கொச்சைப்படுத்தி விட்டு இன்னொரு தாயைஏற்றுக்கொள்என்று அவனை நிர்ப்பந்திக்கும் நிலையை ஒத்தது. பொருளாதாரத்தில் கல்வியில் சமுதாயத்தில் பின்தங்கி நிற்கும் மக்களிடம் சென்று ஆசைவார்த்தை காட்டிச் சில அன்பளிப்புகளைக் கொடுத்து அவர்களை மதம் மாற்றுவது நாகரீகமென்பதற்கு எள்ளளவும் ஒத்துவராது. மனிதநேயத்திற்கு முற்றிலும் மாறானது மட்டுமன்றி மனிதமேம்பாட்டிற்கு மிகவும் ஆபத்தானது.

திருமதி.செல்வம் கல்யாணசுந்தரம்.

கடபபதற்கு தடைகளும் வெல்வதற்கு போர்களும் இல்லையென்றால் வாழ்க்கை சப்பிட்டுப்போய்விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பவளவிழாக்கொண்டாடும் பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக்குருக்கள்

பிரதிஸ்டாசிரோன்மணி. கிரியாகிரமஜோதி. பிரதிஸ்டாகலாநிதி. சிவாச்சார்ய சக்கரவர்த்தி.சுவானுபூதி பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக்குருக்கள் (நவாலியு,ர் - கொழும்பு) அவர்களின் பவளவிழாக்கொண்டபட்டம் சென்ற 10.06.01 ஞாயிற்றுக்கிழமை மயூராபதி சுப்பம்மாள் கல்யாண மண்டபத்தில் வெகுசிறப்பாக நடைபெற்றது. நம் வணக்கத்துக்குரிய சிவார்ச்சார்ய பெருமகனாரை சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக்கழகம். சங்கநாதம் சஞ்சிகை ஆகியன இணைந்து வாழத்துகின்றன.

## பவளவிழாக்காணும் மட்டக்களப்பு ஸ்ரீராமகிருஷ்ணமிசன் மாணவர் இல்லம்.

கல்லடி உப்போடையிலுள்ள மாணவரில்லம் சமூகத்துக்கான தனது பணிகளில் 75 ஆண்டுகளைப்பூ ர்த்தி செய்து இவ்வாண்டு தனது பவள விழாக்கொண்டாடுகிறது. இவ் இல்லம் மேலும் பல நூற்றாண்டுகள் சேவை புரிய வேண்டுமென சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக்கழகம் சங்கநாதம் சஞ்சிகை ஆகியன இணைந்து வாழ்துகின்றன

## ஆச்சார்யாபிஷேகம

முன்ஸேஸ்வரம் ஸ்ரீ வடிவான்பிகை சமேத முன்னைநாதப்பெருமான். மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்மன். ரம்பெடை ஸ்ரீ பக்த ஆஞ்சநேயப் பெருமான் துணைகொண்டு கடந்த 20.05.01 அன்று பிரம்மஸ்ரீ சு.கிருஸ்ரீஷ்ணகுமார் சர்மா அவர்களுக்கு சிவார்சார்ய சக்கரவர்த்தி "சுவானுபூதி" பிரம்மஸ்ரீ நவாலியூர் சாமஜி விஷ்வநாக்குருக்கள் அவர்கள் தீடசா குருவாக இருந்து ஆச்சார்ய அபிஷேகம் நிகழ்தப்பட்டது. இவரை சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக்கழகம் சங்கநாதம் சஞ்சிகை ஆகியன இணைந்து வாழ்துகின்றன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இருமனம் இணையும் திருமணத்தின் அர்த்தங்கள் தான் என்ன?

இந்து ஒருவனின் வாழ்க்கைக் கட்டத்தில் மிகமுக்கியமான ஒரு கட்டம் திருமணமாகும். திருமணத்தில் பல சடங்கு முறைகள் இருக்கின்றன. இச்சடங்குகள் ஏன்எதற்காக செய்யப்படுகின்றன என்பது பற்றிப்பலரிடையே சந்தேகம் எழுகின்றது.அதாவது

- ❖ பொன்னுருக்குதல் எதற்காக செய்யப்படுகின்றது?
- ❖ கன்னிக்கால் நடுதல். நவதானியங்கள் விதைத்தல் போன்றன எதற்காக?
- ❖ காப்புக்கட்டுதல் என்றால் என்ன?
- ❖ கன்னிகாதானம் செய்தல் எதற்காக?
- ❖ பெண்ணிற்கு கூறைமாற்றுதல்போன்றவை ஏன்?
- ❖ தாலிகட்டுதல் எதற்காக?
- ❖ மாலைமாற்றுதல்மூன்றுதடவைஏன் செய்யப்படுகின்றது? ஒருமுறை மாற்றுதல் போதுமானதுதானே.
- ❖ திருமணம் முடித்ததும் குங்குமம் வைத்தல் ஏன்? அதற்கு முதல் பெண் குங்குமம் வைத்தால் என்ன?
- ❖ பால் பழம் ஏன் மறைத்துக்கொடுக்கிறார்கள்?
- ❖ ஏழுடிவைத்து அக்கினியை வலம்வருதல் எதற்காக?
- ❖ மோதிரம் எடுத்தல் எதற்காக?
- ❖ ஆசீர்வாதம் எதற்காக.
- ❖ கால் மாறுதல் என்ற ஒருமுறை உள்ளது.இதன் பொருள் என்ன?
- ❖ மாப்பிள்ளைத் தோழன்.மணப்பெண்தோழிகள் எதற்காக உள்ளனர்.
- ❖ இவற்றை விட பிராமணர்களின் முறை முற்றிலும் மாறுபட்டதாகும் இதன் விளக்கம் என்ன?

போன்றவற்றை ஆராயின் திருமணமும் அதன் அர்த்தங்களும் தெளிவாக விளங்கும்.இதற்கான விளக்கங்கள் மறு இதழில்.

*ஆக்கம்*
*S.விஜயந்தி*



நேர்மையின் முத்திரைபதித்த முகங்களே அழகுமிகுந்த முகங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தமாதம் ஸ்ரீ ஆதிசங்கரர்.

மலையாள தேசத்தில், காலடியில் அவதரித்து.. சிறு வயதிலேய சன்னியாச தீட்சைபெற்றுப் பாரததேசம் முழுவதும் திக்விஜயம் செய்து, நான்கு பீடங்கள் அமைத்துச் சண்மத ஸ்தாபனம் செய்து தசநாமி(சன்னியாச) பரம்பரையைத் தோற்றுவித்துப் பற்பல பக்திநூல்கள், பாஸ்யங்கள் எழுதி, சனாதன தர்மத்துக்குப் புத்துயிரளித்து, அத்வைதக்கொள்கையை நிலைநாட்டிய பேரருளாளர். இன்றும் ஆதிசங்கரரின் அருள்ஞான பரம்பரை நிலைத்த, நீடித்த, தொண்டாற்றி வருவது யாவரும் அறிந்ததே.



சங்கரனின் அவதாரமாய்க் காலடிக்கு வந்தவனே
பங்கமில்லாச் சிவகுருவின் தவப்பயனே தனிமுதலே
முங்களம்சேர் ஆயாம்பிகை மணிவயிறு வாய்த்தவனே
ஏங்கள் இந்து தர்மம் காத்த இறையவனே போற்றி போற்றி

நான்குபீடம் நாற்றிசையில் துலங்கவழி வகுத்தவனே
பாங்குடனே பக்திநெறி பரப்பிவைக்கத் துணிந்தவனே
தசநாமி பரம்பரையைத் தந்துலகைக் காத்தவனே
தவயோக சாமரமே தண்ணருளே போற்றி போற்றி

தவமைந்தன் வரவேண்டித் தவமிருந்த சிவகுருவின்
தவத்துக்கருள் புரிந்து தானே இறங்கிவந்து
அவமே அலைந்தமக்கள் அனைவரையும் அரவணைத்து
அன்புவழிக்கிட்டுச் சென்ற ஐயனே போற்றி போற்றி

அத்துவிதக் கொள்கைதனை அகிலமுற்றும் அறிவதற்கு
ஆன்மீகப் பாதைகளை ஆங்காங்கே அமைத்து வைத்து
ஆன்மநேய உறவுண்டாக்க அற்புதங்கள் பலபுரிந்து
ஆனந்த வாழ்வளித்த அற்புதனே போற்றி போற்றி



நபர்: உங்கள் மனைவி இனிமேல் உங்களை அடிப்பதில்லை என்று சத்தியம் செய்ததாக சொன்னீங்கள்.பின்ன ஏன் தலைவீங்கியிருக்கிறது.

மற்றவர்: தலையில் அடித்துச்சத்தியம் பண்ணினபோது வேகமா அடிச்சிட்டா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாயத்தின் பால் சமயக்கண்ணோட்டம்

கலைகள் அனைத்தையும் எம்மனிதனும் தன் ஆயுள் காலத்தில் கற்றுமுடிக்க இயலாது கணக்கற்ற பிறவிகள் எடுத்தும் அப்பறவிகளி லெல்லாம் ஏராளமாகக் கற்று வந்தாலும் அதன் பிறகு கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு என்னும் பழமொழியே அக்கற்றறிந் தவனுக்கம் பொருத்தமானதாகும். இதனையே நாலடியாரில் "கல்வி கரையில கற்பவர் நாற்சில" என்னும் அடிகளின் மூலம் கூறப்பட்டிருக்கிறது. அதே போல் கலைகள் அனைத்தையும் கற்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை. தன்னைப் பண்படுத்துவதற்கு எதுவாயிருக்கும் சிறு பகுதியைக் கற்றும் அறிந்தும் அடங்கியும் இருப்பவனே கற்றவன் ஆகின்றான். இதனையே நாலடியாரில் எவ்வாறு அன்னமானது நீரிலிருந்து பாலைப் பிரித்து பருகுகின்றதோ அவ்வாறே மனிதனானவன் எண்ணிலடங்கா நூல்களில் தனக்கு உகந்தவற்றை மாத்திரம் கற்று வருவானேயாயின் அவன் முழுமை அடைகிறான் என்று கூறுகிறது கடவுள் ஒருவரே மெய்ப் பொருள் மற்றையவையாவும் நிலையற்றவைகள் என்றும் பேருண்மையைக் கற்று அறிந்து அடங்கியிருப்பவன் கல்விகற்ற வனாகின்றான். கோலால் ஒருவனை அடித்துத் துன்புறுத்துவதை விடக் கொடியது எழுத்தாலும் பேச்சாலும் ஒருவனைத் துன்புறுத்துவது பிறரைத் துன்புறுத்து வதற்கென்று பயன்படுத்துகின்ற கல்வியெல்லாம் மெய்யான கல்வி ஆகாது. பொய்யான கல்வி அல்லது கல்லாமை என்றே அதைப்புறக் கணிக்க வேண்டும். மனிதனை இன்னியல்விலும் கடவுள் வழிபாட்டிலும் மேலோங்கி வரச் செய்வது பண்பாடற்ற கல்வியாகின்றது. தான் அல்லாததை தான் என்று கருதுவதும் அணிந்திருக்கம் உடையை தன் சொரூபமாக நினைத்துப் பெருமைப்படுவதும தன்னை மேன்மகளாக எண்ணிக் கொள்வதும். அகங்காரமாகும். தான் இல்லாத உடலையும் உள்ளத்தையுமத் தானாகக் கருதுவதால் அகங்காரமானது எண்ணிறைந்த வடிவங்கள் எடுக்க ஆரம்பிக்கிறது. மனிதனுடைய உண்மையான சொரூபம் உடலுக்கம் உள்ளத்துக்கம் அப்பாற் பட்டது. அப்பெருநிலையி லிருந்து பழகதலே நற்குணமாகம். அகந்தையிலிருந்து பழகுதல் துர்க்குணம். சலனம் என்ற சொல கெட்டுப்போய் விடும் இயல்பை உடையதுஎனப் பொருள்படுகின்றது. இந்திரஜாலம் என்பது திடீரென்று தோற்றத்திற்கு வந்து பின்பு இருக்கும் இடம் தெரியாமல் மாயமாய் மறைந்து போகலாம். மனிதனுக்கு அமைந்துள்ள பற்றுக்களில் உடல்பற்று மிகவும் கொடியது. வானிலேமேகங்கள் தோன்றித் திடீரென்று மறைவதைப் போன்றது இந்த தேகமும். கதி என்னும் சொல் ஈண்டு மோட்சத்தைக் குறிக்கிறது. இறைவனுடைய பெரிய திட்டம் அருள் என இயப்படுகிறது மோட்சத்தை அடைய வேண்டும என்று செய்யம் எக்காரியமும் நற்பயனை தருகின்றன. இதற்கு மாறானவை யாவும் வீணானதாக நீர்த்தேக்கம் போன்று ஆகின்றன.. இறைவனுடைய அருளோ அவனைப் படிப்படியாக இறைவ னுடைய சந்நிதிக்கே கொண்டு வந்து சேர்ந்து விடுகிறது. (இக்கட்டுரையானது தாயுமானவர் இயற்றிய ஆனந்தமானபரம் என்ற நூலிலிருந்து (ஸ்ரீமதசுவாமி பவானந்தவாரியார்) தொகுக்கப்பட்டது.

ஆக்கம்: பிரபாலினி(பதுளை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளை வரம்அளித்த நந்தினி

கருத்துள்ள கதை

மனு என்னும் மன்னவர் சூரியதேவனின் புதல்வர். அத்தகைய மனுவின் வம்சத்தில் திலீபன் என்னம் சிறந்த வேந்தன் தோன்றினான். இளமையிலேயே அவன் முதியோர்க்குரிய அறிவை அடைந்திருந்தான். பிற மன்னர்கள் அவனுக்கொப்பாக ஆட்சி புரிந்ததில்லை. திருட்டு முதலிய குற்றங்களை அவனது நாட்டில் எவரும் செய்ததில்லை. பிரஜைகள் அனைவரும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தனர்.

இத்தகைய சிறப்பு மிக்க திலீபனது மனைவியின் பெயர் ஸுதக்ஷினை. நீண்ட காலமாக அவனக்கு அவளிடம் மகன் பிறக்காதால் வருந்திய மன்னன் அதன் காரணத்தை அறிய விரும்பித் தன் மனைவியுடன் கல குரு வஸிஷ்ட முனிவரின் ஆச்ரமதக்துக்குச் சென்றான். திலீபன் தனக்கு மகப்பேறில்லாத குறையைக் கூறி. அதன் காரணத்தையும் பரிகாரத்தையும் உரைக்குமாறு வேண்டினான். வஸிஷ்ட முனிவர் சிறிது தியானம செய்து அவனக்குக் காமதேனுவின் சாபத்தால் குழந்தை பிறக்கவில்லை என்றும். அச்சாபம் நீங்க. தம் ஆச்சிரமத்திலுள்ள காமதேனுவின் மகளாகிய நந்தினி என்னும் பசுவைப் பூஜிக்க வேண்டுமென்றும். அதன் கருணையால் பத்திரபாக்கியம்ஏற்படும்என்றும்உரைத்தார்.

அந்தச் சமயத்தில் அங்கு பசுவும் வந்தது. முனிவரின் கட்டளைப் படி மன்னன் மறுநாள் காலை முதல் நந்தினிக்குப் பணிவிடை செய்யஆரம்பித்தான். மேய்ப்பதற்காக நந்தினியை வனத்திற்க ஓட்டினான். சுவைமிக்க புல்லைஎடுத்துஅதற்குக் கொடுத்தான். அதன் மேல் உட்கார்ந்து துன்புறுத்தும ஈக்களை ஓட்டினான். நிழல்போல் அதனைப் பின் தொடர்ந்தான். ஆது நின்றால் தானும் நிற்பான். ஆது புறப்பட்டால் தானும் பறப்படுவான். அதனைக் காக்க எப்பொழுதும நானேற்றிய வில்லைத தாங்கிச் சென்றான். மாலையில் பசு திரும்பியபொழுது திலீபனது மனைவி அதைப் பூஜித்து வரவேற்றாள். அரசனும் அரசியும் பசு தூங்கிய பின் தூங்கிய பிறகு தூங்குவார்கள்.

இங்ஙனம் பத்தினியுடன் விரதம் அனுஷ்டித்து வந்த மன்னனுக்கு இருபத்தொரு நாட்கள் சென்றன.அப்பசு மறு நாள் இமய மலையில். புல் மிகவும் வளர்ந்துள்ள சுற்றுப்புறமுள்ள ஒரு குகையருகில் சென்று புல் மேய்ந்து கொண்டிருந்தது. அப்பொழுது அரசன். தெய்வத் தன்மை பெற்ற முனிவரின் பசுவை எக்கொடிய விலங்கும் துன்புறுத்த முடியாது என்று எண்ணியதால் நந்தினியைக் கவனிக்காமல் மலையழகை நோக்கிக் கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு சிங்கம் பசுவின்மேல் பாய்ந்து அதனைப் பலமாகப் பற்றி இழுத்தது. பசு கதறியது. சிங்கத்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்தம்பிதது நின்றது. அரசன் மிக வருந்தினான்.அப்பொழுது சிங்கம் மனிதக் குரலில் பேச ஆரம்பித்தது. மன்னனே. உன் அஸ்திரம் என்னை ஒன்றும் செய்ய முடியாது. உன் வலிமை என்னிடம் பயன்படாது. நான் சிவதேவகன். இதோ எதிரில் தென்படும் தேவதருமரம் பார்வதி தேவியால் அன்புடன்

வளர்க்கப்படுகின்றது. மகேசனும் இதனை மைந்தனாகக் கருதுகிறார். இம்மரத்தின் பாதுகாப்புக்காக மகாதேவன் என்னைச் சிங்கம் வடிவினனாகச் செய்து இங்கு இருக்குமாறு நியமித்துள்ளார். அருகில் வரும் விலங்கை ஆகாரமாக உண்ணுமாறு எனக்குக் கட்டளையிட்டுள்ளார். ஆகவே அருகில் வந்த இப்பசு உனக்குப் பிடித்தமான உணவாகும். தெய்வ பலமுள்ள என்னிடமிருந்து இப்பசுவைக்காப்பாற்ற முடியாததால் உனக்கு இழுக்கு எதுவும் எற்படாது என்று சிங்கம் உரைத்தது.

அப்பொழுது அரசன் பசுவுக்குப் பதிலாகத் தன்னையே உட்கொள்ளமாறு கூறினான். அற்பப் பசுவாகிய சிறிய பொருளுக்காகப் பெரும்பொருள்கள் பலவற்றை இழக்க விரும்புவது அறிவீனமாகும் என்று சிங்கம் உரைத்தது.அப்பொழுது திலீபன் சிங்கத்திடம் இப்பசு சாதாரணமானதன்று. உன்னைப் போல் இதுவும் பெருமையடையது. இது பூஜிக்கத்தக்க பெருமை பெற்ற காமதேனுவின் மகள். நீ உன் கடமையைச் செய்ய விரும்புவது போல் முனிவரின் சேவகனாகிய நான் அவரது சொற்படி இப்பசுவைக் காப்பாற்ற வேண்டுமல்லாவா! உனக்கு என்மீது கருணை இருக்குமாயின் என் புகழுடலைக் காப்பாற்று. என்பூத உடல் அழிவதைப்பற்றி நான் வருந்தவில்லை. ஆதலால் என்னை உணவாக எற்றுக் கொண்டு. பூஜிக்கத்தக்க பசுவை விட்டு விடும். என் விருப்பத்தை நண்பனாகிய நீ நிறைவேற்றுவாயாக! என்றான்.



சிங்கம் அரசனது வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு பசுவை விட்டது. உடனே மன்னன் தன் சரீரத்தைச் சிங்கத்திற்கு உணவாக அர்ப்பணம் செய்தான். ஆனால் அவன் மேல் சிங்கம் பாயவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது தியானத்தைப் புகழ்ந்து தேவர்கள் பொழிந்த பூமாரி அவன் மேல் விழுந்தது. மன்னன் தலை நிமிர்ந்த பொழுது சிங்கத்தைக் காணவில்லை. பசுவை மட்டுமே பார்த்தான்.

நந்தினி மன்னனிடம்.

தியாக பத்தியுள்ள அரசனே. உன் பக்தியைப் பரிசிலிப்பதற்காகவே இப்பொய்த் தோற்றத்தை உண்டாக்கினேன். வஸிஷ்டரின் அருளைப் பெற்ற என்னை எமன் கூட நெருங்க முடியபது. உனது குருபக்தியையும். என்னிடம் நீ வைத்துள்ள கருணையையும் நான்நன்கு அறிந்து கொண்டேன். மிக மகிழ்ந்தேன்.நீ விரும்பியதைக் கேட்பாயாக என்ற கூறியது.எல்லையற்ற மகிழ்ச்சியடைந்த திலீபன். வம்சத்தைவிருத்தி செய்பவனும் அழிவில்லாத புகழுடையவனுமாகிய சிறந்த புதல்வனான ஸுதசிணையிடம் தனக்குப் பிறக்க வேண்டுமெனக் கைகளைக் குவித்தது. காமதேனுவின் மகளாகிய நந்தினியிடம் வேண்டினான்.மன்னனது வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட நந்தினி தன் பாலை இலைத் தொன்னையில் கறந்து பருகுமாறு கட்டளையிட்டது. மாமுனிவரின் அனுமதி பெற்றுப் பாலைப் பருகுவதாக மன்னன் உரைத்தான். பசுவிடம் வரம் பெற்ற மன்னன் வதனம் தெளிவான முழுமதிபோல் ஒளி வீசியது. அவன் நத்தினியுடன் ஆச்சிரமம் திரும்பினான். பசுவின் அருளை முதலில் முனிவருக்கும் பிறகு தன் மனைவிக்கும் தெரிவித்தான்.குருவின் அனுமதி பெற்ற வேந்தன் நந்தினியின் பாலைப் பருகினான். பிறகு மறு நாள் காலையில் வரத்தை முடித்துக் கொண்டான். முனிவர் ஆசிர்வாதத்தைச் செய்து அரசனை அவனது நகருக்கு அனுப்பினார். நகருக்குத் திரும்பிய மன்னனைக் கண்டு மக்கள்மிகவும் மகிழ்ந்தனர். சில நாட்களில் அரசி. ஆகாயம வெண்மதியைத் தரித்தது போல் கர்ப்பத்தை தரித்தாள்.அனைவரும் அளவற்ற ஆனந்தமடைந்தனர். அவர்களுக்கு ஒரு ஆண் மகன் பிறந்தான். அவன் பெயர் தான் புகு என்பதாகும்.

## ஸ்ரீ கணபதி மந்திரங்கள்

1. ஸ்ரீ வல்லபவ மஹா கணபதி மந்திரங்கள்
   ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம்
   க்லௌம் கம் கணபதயே வர
   வரத சர்வ ஜனம்மே
   வசமானாய ஸ்வாஹா.

2. தனஆகர்ஹண கணபதி மந்திரம்
   ஓம் க்லாம் க்லீம் கம் கணபதயே
   வரவர மமதன
   தான்ய சம்ருத்திம் தேஹி
   தேஹி ஸ்வாஹா.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாத்திய சங்கீத அப்பியாசம்.

வாத்திய சங்கீதமானது பற்பல சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. வாத்திய சங்கீதமானது கானரசத்தை நன்கு புலப்படுத்தவல்லது. உருப்படிகளில் தாதுவிற்கு வாத்திய சங்கீதத்திலேயே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இசையிலே ஸ்வரங்களை (தாதுவை) வாத்தியங்களின் மூலம்தெளிவுற வெளிப்படுத்துவதே வாத்திய சங்கீதமாகும். இங்கு கச்சேரி வாத்தியங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. ஒவ்வொரு வாத்தியங்களின் வாசிப்பு முறையிலும் மிகுந்த நுட்பமும், நிறைந்த இசைநுணுக்கங்களும் உண்டு.வீணை வாத்தியத்திலே வாசிப்பு முறையில் பற்பல விரலடிகள், தாளவகைகள், நுட்ப ஸ்ருதிகள், கமகங்கள் உண்டு. வாத்தியக் கருவிகளின் சிறப்பைத் தெய்வங்கள் மூலம் விளக்கியிருக்கிறார்கள் அதாவது சிவன் கையில் உடுக்கையும், கண்ணன்கையில் குழலும், கலைவாணியின் கையில் வீணையும் காணப்படுகின்றது. இதன் மூலம் வாத்தியக் கருவிகளின் தொன்மை விளங்குகின்றது.வாத்தியங்களைப் பக்க வாத்தியமாகவும், நாட்டிய கச்சேரிகளுக்கு அனுசரணையாகவும், கோயில் உற்சவங்களுக்கு மேடை ஏற்றுவதுடன், தனிக்கச்சேரி செய்வதிலும் சிறப்புற்று விளங்குகின்றது. வாத்திய கோஷ்டி அமைப்பு இந்திய சங்கீதத்திலே மிகச்சிறந்த இடத்தை வகிக்கிறது.எந்தவொரு வாய்ப்பாட்டுக்காரருக்கும் பக்க வாத்தியத்தின் உதவியோ, ஸ்ருதியின் உதவியோ இன்றி கச்சேரி செய்ய முடியாது.

எனவே வாத்தியப் பிரபந்தம் சிறப்புற அமைத்து கச்சேரி செய்வதே வழக்கமாகும்.மிகவும் துரிதமாக வாசிக்க உகந்த வாத்தியம் ஜலதரங்கம், குழல் என்பனவாகும். வீணையில் த்ரிகால ஞானமும் கேட்பதற்கு ரம்மியமாய் இருக்கும். வாத்தியங்களைக் கையாண்டு அதன் நுட்பங்களை அறிபவர்கள் மிகுந்த கலாரசிகர்களாகத் திகழ்வார்கள் என்பது திண்ணம்எமது சங்கீதம் ஒரு ஆதார ஸ்ருதிக்கு அமைக்கப்பட்டு இருப்பதால், ஸ்ருதி வாத்தியமின்றி பாடுவது சிறப்பானது அல்ல, இங்கு ஸ்ருதிக்கு உகந்தது தம்பராவாகும். ஐந்நூறுக்கும் குறையாத வாத்தியக் கருவிகள் இருப்பினும், தற்காலப் பாவிப்பில் அவை அனைத்தும் இருக்கும் என்பதில் ஐயம் உண்டு.தாள வாத்தியங்கள் எமது இசைக்கு மிக அவசியம். அவ்வகையில் மிருதங்கம் முதலிடம் வகிக்கிறது. தாள வாத்தியம் வாசிப்போர் நிரம்பிய தாள ஞானம் பெறுகின்றார்கள்.கமகங்களைப் பற்றியும், பற்பல நுட்ப ஸ்ருதிகளைப் பற்றியும், அவற்றின் சாயலைப் பற்றியும், க்ரக மூர்ச்சனை அம்சங்கள் பற்றியும் அறிவதற்கு வாத்திய சங்கீதத்தின் உபயோகமே அவசியம் என்பது வெளிப்படை ஆகின்றது.



தொகுப்பு:

த.பிரசாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன்.... எதற்காக?

*நமது கால்கள் காகிதங்கள்,புத்தகங்கள் மற்றும் பிறமனிதர்கள் மேல் படுவதை நாம் விரும்புவதில்லை. இதன் காரணம் என்ன?*

காகிதம் மற்றும் பிற மனிதர்களை நாம் ஏன் கால்களினால் தீண்டுவதில்லை? தற்காலத்தில் பொருட்களைப்புனிதமானவை. புனிதமற்றவை என்று பாகுபடுத்தியுள்ளோம். ஆனால் புராதன இந்தியாவில் ஆன்மீகத் தொடர்புடையவை அல்லது உலக அறிவை சார்ந்தவையாக இருப்பவை ஆகிய அனைத்துமே தெய்வத்தன்மை வாய்ந்தவையாகக் கருதப்பட்டன. இவ்வாறு சீடர்களுக்குக் குருக்களால் போதிக்கப்பட்டது. இந்தியக் கலாச்சாரததில் அறிவுக்கு மிகவும் உன்னதமான மதிப்பு அளிக்கப்பட்டுள்ளது. எனவேதான் அறிவைப் புகட்டும் கருவிகளைப் பாதங்களால் தீண்டக் கூடாது இந்த விவேகமானது. சிறு வயதிலிருந்தே புத்தகங்களிடமும் கல்வியிடமும் ஆழ்ந்த பயபக்கதியை வளர்க்கிறது. இதனால் தான் நாம் ஒவ்வொரு ஆண்டும் கல்விக் கடவுளான சரஸ்வதி தேவியை ஆராதிக்கும் பூஜை அல்லது ஆயுதபூஜையன்று. நமது புத்தகங்கள் நாம் பயன்படுத்தும் வாகனங்கள் கருவிகள் ஆகிய அனைத்தையும் வணங்கிப் பூஜிக்கிறோம். ஒவ்வொரு நாளும் நாம் படிப்பைத் தொடங்கும் முன் பின்வருமாறு பிரார்த்திககிறோம். சரஸ்வதி தேவியே! வரங்களைத் தருபவளும் எங்கள் விருப்பங்களைப் பூர்த்தி செய்பவளும் நீயே. எனது படிப்பைத் தொடங்கும்முன் உன்னை வணங்குகிறேன் என்னுள் நீ என்றும் நிறைந்திருப்பாயாக.

*பிறர் மீது நமது பாதங்கள் படுவது தவறான செயல்என்று கருதப்படுவது ஏன்:*

மனிதன். இறைவன் குடிகொண்டுள்ள மிகவும் அழகான. உயிருள்ள ஆலயமாகக் கருதப்படுகின்றான். ஆகவே ஒருவர் மேல் நம் பாதம் படுவது அவருள் குடிகொண்டிருக்கம் தெய்வத்தினை அவமதிப்பதற்கு ஒப்பாகும். ஆகவே அக்கணமே மன்னிப்புக் கோருதல் அவசியம். மன்னிப்பு. பயபக்தியடனும். பணிவுடனும் வேண்டப்படுகிறது. இவ்வாறு நமது. பல எளிமையான பழக்கவழக்கங்கள் ஆழ்ந்த தத்துவ உண்மைகளை நமக்குச் சுட்டிக் காட்டுகின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறுபிறப்பின் மறைவில்

## மறைந்திருக்கும் மர்மம் என்ன?

இராமகிருஷ்ணர் கர்மம் ஒவ்வொன்றுக்கும் கர்மபலன் உண்டு. மிளகாயைச் சாப்பிட்டால் வயிற்றில் எரிச்சல் உண்டாவது திண்ணம். பாவம் செய்கிறவனுக்கு அதன் விளைவு வந்தே தீரும். ஆனால் ஈசுவர சாசாத்காரம் செய்திருக்கிறவன் பின்பு பாவம் எதையும் செய்வதில்லை என்கிறார். வாழ்க்கையில் சிக்கலான பிரச்சனைகளுக்குப் புரியாத பிரச்சனைகளுக்கு இந்துமதம் இப்படித்தான் விளக்கம் சொல்லி இருக்கிறது.மூன்று வயதே நிரம்பியிருந்த ஞான சம்பந்தரால் எப்படிப் பதிகம் பாட முடிந்தது? கற்பனைக்கதை என்று ஒதுக்கி விடுவது சுலபம் காரணம் மூன்று வயதே நிரம்பியிருந்த திருஞானசம்பந்தர் பதிகம் பாடுவதை நாம் பார்க்கவில்லை. சம்பந்தர் இருக்கட்டும். சகுந்தலா தேவி என்கிற அம்மையார் எட்டு வயதிலேயே. எவ்வளவு பெரிய பெருக்கல்கணக்கையும். தாளில் போடுப் பார்க்காமலேயே சொல்லிவிட்டார். பல கணித நிபுணர்கள் பல சிக்கலான பெருக்கல்களைக் சொன்ன போதும் எந்தவிதமான தயக்கமுமின்றிச் சரியான விடையைச் சொல்லிவிட்டர். கேட்டவர்கள் பிரமித்துப் போனார்கள். இதற்கு என்ன விளக்கம்? ஒருமைக்கண் தாம் கற்ற கல்வி. எழுமைக்கும் ஏமாப்பு உடைத்து. என்கிற வள்ளுவன் கூற்றைத்தானே இது நிரூபிக்கிறது? இதை நம்பினால், ஞான சம்பந்தர் மூன்று வயதில் பதிகம் பாடியதையும நம்பத்தான் வேண்டும். இவற்றை நீங்கள் சிந்தித்துப்பார்த்தால் மறுபிறப்பு உண்டா இல்லையா என்பது உங்களுக்கு விடையாக அமையும்.

வேதகாலத்தில் இறிக்வேதப் பாடல்களில் உடம்பு அழியினும் உயிர் அழியாது. உயிர் பிறப்புக்கு முன்பும் இருந்தது. பின்பும் இருக்கும் ஆன்மா பல பிறப்புக்கள் எடுக்கிறது. உயிர்கள் செய்த பாவ புண்ணியங்களுக்கேற்பத் தேவர் உலகமோ கந்தர்வர் உலகமோ. பிதிர்கள் உலகமோ நரகர் உலகமோ செல்லுகின்றன. இன்ப துன்பங்களை அனுபவிக்கின்றன என்று கூறப்படுகின்றது.

உபநிடத காலத்தில உடம்பு அழியினும் உயிர் அழியாது: ஆன்மாக்கள் இவ்வுலகிலும் மறு உலகங்களிலும் வாழ்கின்றன. மறு பிறப்பெடுக்கின்றன. பிறந்தும் இறந்தும் உழல்கின்றன. மரணத்துக்குப்பின்பு ஆன்மா பதிய உடம்பெடுத்து மறு உலகங்களில் வாழ்கின்றதெனக் கூறப்படுகிறது.

புராண காலத்தில்

(1) இறைவன் ஒருவன் உளன். ஆன்மாக்கள் பல. தேவர் நரகர். காந்தர்வர் உளர் இவ்வுலகேயன்றிப் பல உலகங்கள் உள.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) ஆன்மாக்கள் பிறக்கும் போதே அவற்றின் வாழ்நாட்கள் நிருணயிக்கப்பட்டு விடுகின்றன. எல்லாம் விதப்படி நடைபெறுகின்றன. விதியை வெல்லத் தேவர்களினாலும் முடியாது. வாழ் நாட்கணைக்கையும் இவ்வுலகில் ஆன்மா செய்யும் புண்ணிய பாவங்களின் கணக்கையும் எமன் உலகத்திற் சித்திர புத்திரனார் எழுதி வைக்கிறார்.

(3) ஆன்மாவின் ஆயுட்காலம் முடிவடையும் போது அதனை எடுத்துச் செல்ல எமதூதர் வருகின்றனர். இவர்கள் பயங்கரமான தோற்றமுடையவர். இவர்களைக் கண்டதாகச்சிலர் கூறுகின்றனர். இறக்கும் போது இறைவன் அருள் ஒன்றே ஆன்மாவுக்கு உறுதுணையாகும். இறைவன்அருள் ஒன்றே ஆன்மாவுக்கு உறுதுணையாகும். இறைவனடியார்க்கு மரணபயமோ வேதனையோ இல்லை. அவர்கள் எமதூதருடன் போகாது இறைவனுடன் செல்வர். மார்க்கண்டேய புராணம் சாவித்திரி சத்தியவான் கதை முதலியன இதை விளக்குகின்றன.

(4) ஆன்மாஉடனே எடுத்துச் செல்லப்படுமெனச் சில புராணங்கள் கூறுகின்றன. இறக்கும் போது ஆன்மா அதிர்ச்சியினால் மயக்கமடைகிறதெனவும். இம்மயக்கம் நீங்கச் சில காலஞ் செல்லும் எனவும். அது 31 நாட்கள் இவ்வுலகில் தங்கியருக்குமெனவும் வேறு சில புராணங்கள் கூறுகின்றன.

(5) இறந்தபின் ஆன்மாவுக்குத் தூலவுடம்பில்லை அது சூக்கும உடம்பில் ஆவியுருவில் இவ்வுலகிற் சில காலம் நடமாடுகிறது ஆசைகள் மோகங்களுடைய ஆன்மாக்களைச் செத்த பின்பும் இந்த ஆசைகளும் மோகங்களும் தொடருகின்றன. உணவு உடை முதலிய நுகர்வுப் பொருட்களை மணந்து

(6) செத்தவர் பெயரிற் செய்யப்படும் தானதர்மங்களும் ஓதும் மந்திரங்களும். செய்யும் வழிபாடுகளும் ஆன்மா எங்கிருப்பினும் அங்கு சென்று அதற்குச் சாந்தி அளிக்கும்.

(7) செத்தவரின் ஆன்மாக்கள் இவ்வுலகிலிருந்து எமன் உலகஞ் சென்றடைய ஒரு வருட காலஞ் செல்லும் இவை பல உலகங்களைக் கடந்து சென்று எமன் உலகத்தை அடைகின்றன. பாதையிற் பல இடர்களையும் அரக்கர் பிசாசுகளின் தொல்லைகளையுஞ் சந்திக்கின்றன. பலவிடங்களில் தங்கியிருந்து இளைப்பாறிய பின் பிரயாணத்தைத் தொடருகின்றன. ஒவ்வொரு மாதமுந் தங்குமிடங்களும் சந்திக்கும் இடங்களும்விபரமாகக் கூறப்படுகின்றன. ஒரு வருட காலத்துக்கு மாதாமாதம் மாளயங் கொடுப்பது ஆன்மா தங்குமிடங்களில் அதற்குச் சாந்தியளிப்பதற்காகும்.

தொடரும்.....

இணைஆக்கம்
**G.சுமதி & M.வாணிதாஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலைகளைச் சிதைக்கலாம் சமயத்தை அல்ல

உருவவழிபாடு கூடாது என்றால், அந்தத் திருவுரு வங்களை வெயியேற்றாமல். அவைகளை உடைத்துக் கொண்டிருக்கும் உன்மத்தர் களைக் கண்டு வெகுண்டு எழுதுவதா? அல்லது முகம் தெரியாத ஆப்கானிய ஏழை களுக்காக மனித நேயத்தோடு வருத்தம் தெரிவிப்பதா? இறைவன் பெயரால்க்கூட மற்ற மதக் கடவுளர்களை, கருத்து க்களை ஏற்றக்கொள்ள முடியவில்லை என்றால் குறைந்தபட்சம் சகித்துக்கொள்ள முடியவில்லை என்றால் அவர்களைப் பற்றி என்ன சொல்வது? ஒரு மதத்தின் மறைநூலைத் தவறாகப் புரிந் து கொண்டு செயல்படுபவர்களை அந்த மதத்தின் பொறுப்பு மிக்க அறிஞர்கள், பெரியோர்கள் தட்டிக்கேட்கத்தான் வேண்டும். உலகவரலாற்றைக் கொஞ்சம் உற்றுப் பாருங்கள். ஏசுநாதரைச் சிலுவையில் அறைவதற்கு ஒத்துழைத்த ஓர் இனம் நூற்றுக் கணக்கான ஆண்டுகள் சொந்தநாடு இன்றி அலைந்தது .இன வெறிகொண்டு ஹிட்லருக்கு ஒத்துழைத்த ஜெர்மனியர்கள் உலகமக்களின் அவமானங்களுக்கு ஆளானது கொஞ்சமா? ஹிட்லரின் கொடுமை களுக்குச் செயல் உருவம் அளித்து பல்லாயிரக கணக்காண மக்களைச் சித்திரவதை செய்து கொன்று குவிக்கப்பட்ட இடம் ஆஷ்விட்ஸ் என்ற Concetration Cam ஆகும்.

ஜேர்மனியர்கள் பிற் காலத்தில் வரலாற்றிலிருந்து பாடம் பெற்றார்கள்



அதனால் concentration camp இருந்த இடத்தில் பார்வையாளர்கள் கட்டாயம் பார்க்கம்படி ஒன்றைச் செதுக்கி வைத்தார்கள். நேஎநச யபயமை என்பதுதான் அது.மீண்டும் இரண்டாம்உலகப்போர் கொடுமைகள் போன்ற இன மத நிற அடிப்படை யிலான மனிதத்தன்மை இல்லாத முட்டாள் தனங்கள் வேண்டாம் என்பதே அதற்கு அர்த்தமாகும். இந்த எச்சரிக்கை தற்போதைய சிலை உடைப்புக் காரர்களுக்கும் சரியாகப் பொருத்தும். ஊலகத்திலுள்ள எல்லா மதவாதிகளும் இந்துமதத்தைத் தரக்குறைவாக விமர்சனம் செய்யுயம் போது முதலில் எடுத்த வைக்கும் புகார் இதுதான்: அருவருக்கத்தக்க உருவ வழிபாடு உருவழிபாடு அவ்வளவு கீழான நிலையா என்ன? பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் இதற்கு விடையளிக்கிறார்: இறைவன் உருவம் உடையவர் என்று மட்டும் சொல்வதில் என்ன பயன்? அவர் ஸ்ரீ கிருஷ்ணரைப் போல் மனிதனாக வருகிறார் என்பதும் உண்மை. அதேவேனையில் அவர் உருவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்றவர் அகண்ட சச்சிதானந்தம் என்பதும் உண்மை வேதங்கள் அவரை உருவ முள்ளவர் . உருவமற்றவர் என்ற இரண்டு நிலைகளிலும் கூறுகின்றன. குணங்கள் உடையவராகவும் குணங்கள் அற்றவராகவும் பேசகின்றன. எப்படித் தெரியுமா? சச்சிதானந்தம் (இறைவன்) எல்லையற்ற கடலைப் போன்றது குளிர்ச்சியின் காரணமாகக் கடல் நீர் பனிக்கட்டியாக உறைகின்றது பல உருவங்களோடு பனிக்கட்டிகள் கடல் நீரில் மிதக்கின்றன.அதுபோல் பக்தி என்னும் குளிர்ச்சியின் காரணமாக சச்சிதானந்தக்கடலில் உருவக்கடவுள் தோன்றுகிறார். பக்தர்களின் பொருட்டே இறைவன் உருவம் தாங்குகிறார். ஞானசூரியன் உதிக்கும் போது பனிக்கட்டி உருகி மீண்டும் தண்ணீராகி விடுகின்றது. மேலும் கீழும் எங்கும் தண்ணீர் மயம்.ஆம் கடவுள் உருவம் உடையவர். உருவம் இல்லாதவரும ' அவர் அதுமட்டுமல்ல .உருவம், அருவம் இரண்டையும் கடந்தவர். ஆவர் இப்படிப்பட்டவர்தான் என்று யாராலும் சொல்லமுடியாது.

தொடரும்.

S.மிரதன்

(சனாதன தர்ம கழகம்)



போலீஸ்1.அந்தப்பூசாரியிடம் எப்படி மாமூல் வாங்கினே?

போலீஸ்2. பேய்ஓட்ட லைசன்ஸ் வைச்சிருக்கிறியா என்று கேட்டுத்தான்.

## எங்கள் பார்வையில்

புதிய நூற்றாண்டில் மக்களுக்கென அறிவு, ஆற்றல் ஆகியவற்றை தரக்கூடிய வகையில் 2001ம் ஆண்டு தை மாதத்தில் இருந்து ஞான அறிவுச்சுடர் என்னும் மாத சஞ்சிகை தமிழ்மரபு.ஆன்மீகம், இந்துமதக்கோட்பாடு,முத்தமிழ் அரங்கம்,திருக்குறள், கம்பராமாயணம், சிறுவர்பகுதி, மருத்துவம், ஜோதிடம், போன்றவற்றை உள்ளடக்கி மனதைக்கவரும் வகையில் வெளிவந்து கொண்டிருக்கிறது.

**சிறந்த வாழ்கையின் தலையாய அணிகலன்கள் தன்னடக்கமும் பணிவும் தான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேனீக்களைப் போன்றவர்களே ஞானிகள்

என்றும் நிலையாக உள்ள உண்மையை சத்தியத்தை உணர்ந்தவர்களை ஞானிகள் என்கிறோம் ஞானியே எனக்கு மிகவும் நெருக்கமானவன் என்கிறான் கீதாசிரியன். ஞானம் என்பது முழுமையானதும் நிறைவானதும் ஆகும்.

" ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை
ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று
ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவாம்
ஞானத்தின் மிக்கார் நரரின் மிக்காரே".

என்பது திருமந்திரம்.

ஞானமார்க்கத்ததைச் சன்மார்க்கம் எனவும் அழைப்பர்.ஞானத்திற்கு அடையாளம் மௌனம்.சரியை, கிரியை, யோகம, ஞானம் ஆகிய மார்க்கங்கள் ஞானத்தில் முடியும்.ஆன்ம அனுபவமே ஞானம் ஆகும். தங்கநகையை நகையாகப்பார்ப்பது சிறப்பல்ல.தங்கமாகக் காண்பதே ஞானம்.

" பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்
பொன்னின் மறைந்தது பொன்னணி பூடணம்"

அறிவை அறியாமை மறைக்கிறது அந்த மறைப்பை நீக்குவது ஞானம் அந்த மறைப்பை ஆபரணம் என்பர். காரியத்தை நாடாமல் காரணத்தை உணரும் மார்க்கம் ஞானமார்க்கம்.ஞானிகள் தம்மில் வேறாக எதையும் காணமாட்டார்கள்.வினையின் நீங்கி விளங்கிய அறிவானவர்கள் அவர்கள்.உடல் பற்றிய உணர்வை முற்றிலும் கடறந்தவர்கள "செத்துத் திரிவர் சிவஞானியர்களே" என்கிறது திருமந்திரம் உடலில் இருக்கும் போதே பிறவியிலிருந்து விடுதலைபெற்று நிற்பதால் ஞானியரைச் சீவன் முத்தர் என்றும் அழைப்பர். ஞானியின் உடம்பை ஆலயம் எனக்கொள்ள வேண்டும்.

ஞானிக்கு தானற்ற தன்மை தான் அவனாதல் சிவமான இயற்கை ஆகிய மூன்றும் அடையாளங்கள் என்கிறார் திருமூலர்.ஞானிகளின் மொழி மௌனம். ஞானிகள் சமநோக்கு உடையவர்கள்.ஞானிகளை வினைகள் நெருங்குவதில்லை.

நாமும் இந்த உலகத்தில் வாழ்கிறோம்.ஞானிகளும் இங்குதான் வாழ்கிறார்கள்.தடாகத்தில் தாமரை உள்ளது அதன் அருகில் தவளை வாழ்கிறது ஆனால் அது தாமரை மலரில் உள்ள தேனைக் குடிப்பதில்லை. தேனீக்களோ மலரில் அமர்ந்து தேனைப்பருகுகின்றன. ஞானிகள் தேனீக்களைப் போன்றவர்கள்.


இந்துசாதனம்

**பிறரை அறிந்தவன் கெட்டிக்காரன் தன்னை அறிந்தவன் ஞானி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கநாதம் குறுக்கெழுத்துப்போட்டி இல.12

**200/=   150/=   100/=**



மேலிருந்து கீழ்:

1. சதுர்யுகங்களில் ஒன்று.
2. புத்தமதப்பிரிவுகளில் ஒன்று.
3. நாற்பாதற்களில் ஒன்று.(குழம்பியுள்ளது)
4. குறைவான அளவைக்குறிக்கும் சொல். பெரும்பாலும் இந்திய தமிழர்களில் பேச்சுவழக்கில் உள்ளது (குழம்பியுள்ளது)

7. அந்தக்கரணங்களில் ஒன்று குழம்பியுள்ளது

8 பெண்ணைக்குறிக்கும் ஒருசொல். குழம்பியுள்ளது.

10. தலைமுடிக்கு ஒத்தசொல

இடமிருந்து வலம்

1.இறைவனையடையும் வழியாக கீதைகூறும்மார்க்கங்களில் ஒன்று.

5. சிவாகமங்களில் ஒன்று.குழம்பியுள்ளது

6. இதுவேள்வி என்றும் பொருள்படும்.

9.விஷ்ணு பெருமானின் தசாவதாரங்களில் ஒன்று. திரும்பியுள்ளது.

11. இந்துமத்தின் புண்ணிய நதிகளில் ஒன்று.குழம்பியுள்ளது.

குறுக்கெழுத்துப்போட்டி இல.9 ன் விடைகள்.

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1.நடராஜவடிவம் | 1.நளவெண்பா |
| 6.பாசம் | 2.ராகம் |
| 8.யாகம் | 3.வளையாபதி |
| 10.பண் | 4.வடம் |
| 11.பதி | 5.வதனம் |
| 12.புதிர் | 7.சம்பந்தர் |
| 13.வனம் | 9.கதிர்காமம் |
| 14.காவேரி | 12புவனம். |
| 16.நீர் | 15.கவரி |
| 17.தனம் | |
| 18.கணம் | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கநாதம் சஞ்சிகை பெறக்கூடிய இடங்கள்

- ❖ சனாதன தர்ம யுவவிழ்ப்புணர்ச்சிக் கழகம்
  No.38 Vihara Road மாத்தளை T.P : 066-33014
- ❖ ஸ்ரீ S.மனோகரக்குருக்கள், மன்னார்தீவு ஆலயங்களின் விசேட பிரதிநிதி உப்புக்குளம் சித்திவிநாயகர் ஆலயம் மன்னார்.
- ❖ Dr.Pa.Suresh 41 A Bus Stand, Hatton T.P: 051-24203
- ❖ கொழும்புசனாதனதர்மயுவவிழ்ப்புணர்ச்சிக்கழகம்
  No: Ridgeway Place Colombo-04 T.P: 01-584145
- ❖ ஸ்ரீ கிருஷ்ணர் ஆலய நற்பணிமன்றம்
  167 அம்பக்கோட்டை, கேகாலை கண்டி 072-500413
- ❖ விவேகானந்த நற்பணி மன்றம்இல.150 பிரதான வீதி தெஹியோவிட்ட
- ❖ ஊவா மாகாண இந்துசமய விழிப்புணர்ச்சிக் கழகம்.

---

# சங்கநாதம்

இந்துக்களின் எழுச்சிக்குரலாக வெளிவரும் மாதாந்தஇதழ்
உங்கள் ஆதரவை வேண்டுகிறோம்.
ஆண்டுச் சந்தா ரூபா 180 மட்டுமே

காசுக்கட்டளை :Sanganatham Y.L.S.D.P
Wellawatte.
Post Office.

காசோலை :குறுக்குக் கோடிடப்பட்டு
Y.L.S.D.P
A/C No 0680-555650-001
Seylan Bank, Colombo-06

Name ..........................................................

Address ..........................................................

T.P No ..........................................................

அனுப்பவேண்டிய முகவரி
No.3 Ridgeway Place Colombo-04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருவ வழிபாடு அவசியமா?

உலகம் தோன்றிய காலம் தொட்டு இன்றுவரை தோன்றியுள்ள மதங்கள் அனைத்திலும் உருவழி பாட்டுமுறை இருந்து வந்துள்ளதோடு இனி தோன்றப் போகும் அனைத்து மதங்களிலும் உருவ வழிபாடு நிச்சயம் காணப்படும்.ஆனாலும் பொதுவாக இந்துதர்மத்தை விடுத்து ஏனைய மதங்கள் இந்துதர்மத்தில் மட்டுமே உருவவழிபாடு காணப்படுவதாக கூறுவதோடு உருவவழிபாட்டை பாவச்செயலாகவும் குற்றச் செயலாகவும் கூறிவருகின்றனர். ஆனால் அவர்களுக்கு தெரியாது போலும் தங்களுடைய மதத்திலும் உருவவழிபாடு உள்ளது என்று. பகவத் கீதையே உருவழி பாட்டை ஏற்றுக்கொண்டுள்ளது என்றால் அதைவிட பெரிய சான்றும் உளதோ?

இஸ்லாம் மதத்தில் உருவவழிபாடு:
சிறப்பாக காபாவை நோக்கி வழிபடுகின்றனர். அத்தோடு வழிபாட்டுத்தலத்தின் தோற்றமும் அடையாலச்சின்னமான பிறையும் ஒருபாரிய உருவவழிபாடே .இஸ்லாமியர்கள் அல்லாஷ் என்று கூறுவதிலிருந்து ஆணையோ அல்லது பெண்ணையோ இங்கு குறிப்பிடுகின்றனர்.அதிலும் சிறப்பாக ஆணையே குறிப்பிடு கின்றனர். ஏனெனில் இவர்கள் பெண்களை தமதுவழிபாட்டுத்தலத்திற்கு பெரிதும் அனுமதிப்பதில்லை. பெண்களை அனுமதிக்காதவர்கள் எவ்வாறு பெண்தெய்வத்தை வணங்க முடியும்.எவ்வாறு பார்பிலும் இஸ்லாம்மதத்தில் உருவவழிபாடு இருந்து வந்துள்ளது. இனியும் இருந்து வரும்.

கிறிஸ்தவ மதத்தில் உருவலழிபாடு:
இயேசுகிறிஸ்து ஒருஉருவமற்ற குணங்களற்ற கடவுள் இவதாரமா? இதை வாசகர்களே தீமானித்து உருவவழிபாடு உண்டு இல்லை என்பதை நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.

பௌத்தமதத்தில் உருவவழிபாடு:
கௌதமபுத்தரும் பௌத்தமத வழிபாட்டுத் தலங்களும் சிறப்பான உருவ வழிபாட்டின் சான்று.

உருவவழிபாட்டில் யூத மதம்:
தங்களின் சொந்த விக்கிரகங்களைத்தவிர மற்ற எல்லோருடைய திருவுருவங் களையும் கண்டனம் செய்வது இவர்களுக்கு வழக்கமான ஒன்று. கடவுள் அழகியதொரு வடிவமாகவே. அடையாள வடிவிலோ குறிக்கப்பட்டால் அது மிகவும் மோசமான பாவம் என்பர் யூதர். ஆனால் இருபுறமும் இரண்டு தேவதைகள் அமர்ந்திருக்க மேலே மேகங்கள் பரவி நிற்க கடவுளை ஒருபெட்டியாக உருவகம் செய்தால் அது புனிதமானது.

ஆனால் அவரே பசு வடிவில் வந்தால் அது முட்டாள்களின் மூடநம்பிக்கை இவ்வாறு யூதமனிதர்கள் கூறுகிறார்கள்.

இந்துமததில் உருவவழிபாடு:
சிநப்பான உருவ வழிபாட்டு முறை காணப்படுவது இந்துதர்மத்தில் தான்.

உருவவழிாபடு ஏன் தேவை?
ஒருபொருளை நாம் நினைவுக்கு கொண்டு வரவேண்டுமாயின் அந்தப் பொருளின் உருவம் .பெயர். தனட்மை போன்றவற்றில் ஒன்றையாவது நினைவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுவருதல் மூலம் குறிப்பிட்ட பொருளை இலகுவில் நினைவுக்குகொண்டு வரமுடியும். இவ்வாறே இறைவனை நாம் நினைவுக்கவேண்டுமாயின அவரை வழிபடவேண்டுமாயின் அவரை தியானிக்கவேண்டுமாயின் அவரின் உருவத்தை பெயரை அடையாளச் சின்னத்தை முதலில் நினைவுக்கு கொண்டுவருவதன் மூலம் கடவுளை இலகுவாக மனதில் நிறுத்தி வழிபடமுடியும்.எனவேதான் இந்துதர்மம் உருவவழிபாட்டை அனுமதிக்கிறது.

இந்து கல்லையும் மண்ணையும் வணங்குவதன் தன்மை:

கல்லிலும் மண்ணிலும் கட்டையிலும் செய்யப்பட்ட உருவங்களை பார்க்கும் இந்து ஏ கல்லே உன்னை வணங்குகிறேன் ஏ மண்ணே உன்னை வணங்குகிறேன் என்று கூறுவதில்லை.மாறாக இங்கு இறைவனையே நினைத்து வணங்குகிறான்.எல்லாவற்றிலும் இறைவன் உறைகிறான் என்பது இந்துதர்மத்தின் கொள்கை.இதை முழுமயாக நம்பிய பிரகலாதனின் பக்தியால் தூணிலிருந்து இறைவன் நரசிம்மமூர்த்தியாக காட்சி தந்தார்.எங்கும்நிறைந்த அந்தப்பரம்பொருளை உணர்வதற்கான மார்க்கமே உருவவழிபாடு.

உருவவழிபாடு அவசியம் தானா?


வான வெளியில் காணப்படும் அருந்ததி நட்சத்திரத்தை பார்க்க வேண்டுமாயின் அதற்குப்பக்கத்தில் காணப்படும் இருபெரிய நட்சத்திரத்தைக்காண்பித்து படிப்படியாக இருந்து நட்சத்திரத்தைப பார்க்கமுடியும். இவ்வாறே இறைவனை உணரவேண்டுமாயின் முதலில் உருவத்தைக்கொண்டு படிப்படியாக உணர்ந்து வரும்போது உருவம் மறைந்து பரம்பொருளை நாம் உணர முடியும்.எனவே இந்துதர்மக் கொள்கையின் படி மட்டுமல்லாமல் அனைத்து மதக்கொள்கையின படியும் நிச்சயமாக இன்றியமையாத ஒன்றாக இருந்துவருகின்றது.

விக்கிரங்களுக்கு நிவேதிப்பதை இறைவன் ஏற்கிறாரா?

எந்தப்பக்தன் சிரத்தையுடனும் அன்புடனும் இலையையேப பூவையோ பழத்தையோ அல்லது ஏதாவது ஒன்றை எனக்க அர்ப்பணம் செய்வானோ அவனால் கெடுக்கப்பட்ட பொருட்களை நான் ஏற்கிறேன். (கீதை9-26) என்று பகவானின் திருவாயாலே மலர்ந்தருளியிருக்கின்றார். கர்மாபாய் எனும் பக்தை அளித்த பொங்கலைப் பகவான் சாப்பிட்டார். மீராபாய் அளித்த பாலும் இறைவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.இதனால் சிரத்தை பக்தி இவற்றின் காரணமாக இறைவன் விக்கிர கங்களில் தன் மகிமையை பிரகடனம் செய்கிறான் என்பதை அறியமுடியும்.

எனவே உருவவழிபாட்டு முறையும் விக்கிரகங்களுக்கு நிவேதிப்பது அவசியம் காணப்படவேண்டும்.

ஆக்கம்
றெபோவலுன்
(விஷ்வ ஹிந்துப் பரிஷத்.
புசல்லாவ )





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் கண்ணதாசன் உங்களுடன்

## தூக்கத்தில நிம்மதி



துாங்குவதுபோலும் சாக்காடு
துாங்கி விழிப்பது போலும் பிறப்பு.

என்கிறார் வள்ளுவன்.

மானிட தர்மத்தை ஒழுங்காக நிறைவேற்றவே மனிதன் அடிக்கடி துாங்கி விழித்து வருகிறான். துாக்கத்தில் கிடைக்கும் அமைதி கவலைகளை மூடிக்கண்ணீரை ஒத்திவைக்கிறது உறக்கம் கெட்டவன் வாழ்க்கை நரகம். மாத்திரைசாப்பிட்டு துாங்குபவன் கவலைகளைச் சாகடிக்கவில்லை. நரம்புகளைச்சாகடிக்கவில்லை. வாழ்கையில் மூன்றில் ஒருபகுதி துாக்கமாக இருக்கவேண்டும்.நடப்பது நடக்கட்டும் நாளை பார்த்துக் கொள்ளலாம் என்று நினைத்துவிடு அப்போதுதான் நிம்மதியான துாக்கம் வரும்.இடது கையில் படுத்தால் இதயம் சுகமாக இயங்கும்.சுவாசம் இலகுவாக இருக்கும்.ஆழ்ததுாக்கம் என்றால் கனவுவராது. தலையணைக்குக்கீழ் விபூ தி .குங்குமம் வைத்தோஅல்லது பூ ஜை செய்துவிட்டோ படுத்தால் நிம்மதியான ஆழ்த துாக்கம் வரும்.கெட்டகனவு வராது.

சாப்பிட்ட பின் குறுநடை செய்தால் நன்று.நல்ல விஷயங்களைப் பேசலாம் அல்லது மிருதுவான சங்கீதத்தைக் கேட்கலாம். வாயுப் பதார்த்தங்களை இரவில் உண்ணக்கூடாது.என்ன குளிரடித்தாலும் சடலத்ததை மூடுவதுபோல் மூடிக்கொள்ளக்கூடாது.மூக்கு மட்டும் வெளியே சுத்தமான காற்றை சுவாசிக்கவேண்டும்.அமுங்கி அமுங்கி ஜோல்ட் அடிக்கும் மெத்தையில் யாரும் படுக்கக்கூடாது.வழுவழுப்பான தரையில் பாய் விரித்துப்படுப்பது வெகுசுகம் வசதியுள்ளவர்கள் கடம்பமரக்கட்டையில் பாய் இல்லாமல் படுத்தால் உடம்புவலி எல்லாம் தீர்ந்துவிடும். வெட்டவெளியில் படுப்பவபவர்கள் வேப்பங்காற்றில் படுப்பது சுகம்.எல்லாவற்றிற்கும் மேலாக மாலையில் மூன்று மைல் நடந்தோ அல்லது விளையாடிவிட்டோ துாங்கினால் யாரையும் கேட்கவேதேவையில்லை.காலையில் விழிக்கும்போது யார் முகத்திலும் விழிக்கவிரும்பா விட்டால் இரு உள்ளங் கை களையும் நன்று சூடேற்றி முகத்தில் தேய்த்துவிட்டு அக்கைகளை பாருங்கள் அதுவே ஒரு சூரியநமஸ்காரம்.

**விஞ்ஞானம் இல்லாத சமயம் மூடத்தன்மை உடையது
சமயம் இல்லாத விஞ்ஞானம் அகம்பாவம் நிறைந்தது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுவரெலியா இந்துக் கலாச்சாரப்பேரவையின் 2001 – 2002 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகசபை.

| | |
|---|---|
| தலைவர் | இரா.பாலகிருஸ்ணன் |
| செயலாளர் | ஆறுமுகம் சுப்ரமணியம் |
| பொருளாளர் | எஸ்.பாலகிருஸ்ணன் |
| கலாசார செயலாளர் | எஸ்.தியாகு |
| கல்வி செயலாளர் | ஏ.வி.ராஜேந்திரன் |
| உப பொருளாளர் | எம்.சந்திரமோகன் |
| உப தலைவர் | பி.நாகேந்திரன் |

நிருவாக சபைஉறுப்பினர்கள்

எஸ்.ராமச்சந்திரன்
எஸ்.பத்மநாதன்
ஏ.சந்திரன்
ஏஸ்.கிருபாகரன்
கே.சந்திரசேகர்
எஸ்.யாதசிவம்
எம்.நடராஜ்
கே.சசிக்குமார்
எஸ்.கண்ணா

## *நுவரெலியா இந்துக்கலாச்சாரப்பேரவையின் கவிஞர் கண்ணதாசன் நினைவு விழா*

ஆவெலியா ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மண்டபத்தில் 24.06.2001 இல் தலைவர் இரா.பாலகிருஷ்ணன் தலைமையில்நடைபெற்றது . சிறப்பு அதிதியாக நுவரெலியா பாராளுமன்ற உறுப்பினர் எம்.சிவலிங்கம் பிரதம அதிதியாக மத்திய மாகாண இந்துக் கலாச்சார தமிழ் கல்வி அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

பெண்மணி : என்ன உன் பையன் கம்ப்யூ ட்டர் படிக்கிறானாமே?
பிச்சைக்காரன்: ஆமாந்தாயி கணக்கு வழக்குப் பார்க்க படிக்க வைக்கிறேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தமாதம் இவைதான்

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| இ | இ | இ | இ | இ | ஆனி 15<br>1<br>ராகு: 10.23-11.53<br>கப: 05.53-7.23<br>நவமி மு.இரவு8.55வரை | ஆனி 16<br>2<br>ராகு: 08.53-10.23<br>கப: 02.53-04.23 |
| ஆனி 17<br>3<br>ராகு:04.23-05.53<br>கப:08.53-10.23<br>ஏகாதசிவிரதம் | ஆனி 18<br>4<br>ராகு: 07.23-08.53<br>கப: 11.53-01.23 | ஆனி 19<br>5<br>ராகு: 02.54-04.24<br>கப: 10.24-11.54<br>பிரதோஷவிரதம்<br>கார்த்திகைவிரதம் | ஆனி 20<br>6<br>ராகு: 11.54-01.24<br>கப: 04.24-05.54 | ஆனி 21<br>7<br>ராகு: 01.24-02.54<br>கப: 07.24-08.54<br>அமாவாசைவிரதம் | ஆனி 22<br>8<br>ராகு: 10.24-11.54<br>கப: 05.54-07.24 | ஆனி 23<br>9<br>ராகு: 08.54-10.24<br>கப: 02.54-04.24 |
| ஆனி 24<br>10<br>ராகு:04.25-05.55<br>கப: 08.55-10.25<br>சதுர்த்தி விரதம | ஆனி 25<br>11<br>ராகு: 07.25-08.55<br>கப: 11.55-01.25<br>மாணிக்கவாசகர்குருபூஜை | ஆனி 26<br>12<br>ராகு: 02.55-04.25<br>கப: 10.25-11.55<br>குமாரஷஷ்டி விரதம் | ஆனி 27<br>13<br>ராகு: 11.55-01.25<br>கப: 04.25-05.55<br>பி.இ.2.23ன்மேல்அட்டமி | ஆனி 28<br>14<br>ராகு: 01.25-02.55<br>கப: 07.25-08.55<br>அட்டமி-நவமி [illegible] | ஆனி 29<br>15<br>ராகு: 10.26-11.56<br>கப: 05.56-07.26<br>நவமிமுற்பகல்10.23வரை | ஆனி 30<br>16<br>ராகு: 08.56-10.06<br>கப: 02.56-04.26 |
| ஆனி 1<br>17<br>ராகு:04.26-05.56<br>கப:08.56-10.26<br>ஏகாதசி விரதம் | ஆனி 2<br>18<br>ராகு: 07.26-08.56<br>கப: 01.26-02.56 | ஆனி 3<br>19<br>ராகு: 02.57-04.27<br>கப: 10.27-11.57<br>பிரதோஷ விரதம | ஆனி 4<br>20<br>ராகு: 11.57-01.27<br>கப: 04.27-05.57 | ஆனி 5<br>21<br>ராகு: 01.27-02.57<br>கப: 07.27-08.57<br>பூரணைவிரதம | ஆனி 6<br>22<br>ராகு: 10.28-11.58<br>கப: 05.58-07.28 | ஆனி 7<br>23<br>ராகு: 09.58-10.28<br>கப: 02.58-04.28 |
| ஆனி 8<br>24<br>ராகு:04.28-05.58<br>கப:08.58-10.28 | ஆனி 9<br>25<br>ராகு: 07.28-08.58<br>கப: 11.58-01.28<br>சங்கரகரஹரசதுர்த்தி | ஆனி 10<br>26<br>ராகு: 02.58-04.28<br>கப: 10.28-11.58 | ஆனி 11<br>27<br>ராகு: 11.59-01.29<br>கப: 04.29-05.59 | ஆனி 12<br>28<br>ராகு: 01.29-02.59<br>கப: 05.59-7.29 | ஆனி 13<br>29<br>ராகு: 10.29-11.59<br>கப: 05.59-07.29 | ஆனி 14<br>30<br>ராகு: 09.00-10.30<br>கப: 03.00-09.30<br>அட்டமி-நவமி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org















Cover page designed by
V.Nilesh
Rotax Limited

Designed & Printed by
SHARP GRAPHICS [PVT] LTD.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org